Registered No. M. 2084.

TRICHINOPOLY

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி தமிழ்மாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

உள்நாடு சந்தா ரூ. 2. வெளி நாடு சந்தா ரூ. 3.

புத்தகம் 1 குரோதனவரு பங்குனிமீ பகுதி 10

விஷய சூசிகை.

| | பக்கம். |
|---|---|
| சுதேசநூல்கள் போலிக் கிரந்தங்களா பத்திராதிபர் ... | 1 |
| ஆமோகேளுக்கு வியாதியுண்டா :— ... | 2 |
| வைத்திய சாஸ்திரம் அனாதி :— ... | 3 |
| சுதேசமுறைகளில் பட்டப்பரீக்ஷை :— ... | 5 |
| ஓர் எச்சரிக்கை :— ... | 6 |
| சென்னை கார்பொரேஷன் :— ... | 7 |
| ஆகாரம் :— ... | 7 |
| இண்டியன் மெடிகல் கெஜட்டில் ஓர் ஆங்கில வியாசத்தின் மொழிபெயர்ப்பு ... | 16 |
| சுதேசவைத்தியர்களுக்கு ஓர் அருமையான உபதேசம் :— ... | 28 |
| வைத்திய சாரம் :— பண்டிட் நாராயண ஐயங்கார் ... | 120 |

Pandit, S. NARAYANA IYENGAR,
Editor and Publisher.

விலாசம் :— வைத்தியசந்திரிகா, கரூர்.

ஆம் வியர்வை
முடியுமென்
இதன் விவரங்க

March 1926 No. 10

# சுதேச நூல்கள் போலிகிரந்தங்களா.

சுதேசவைத்திய நூல்கள் உண்மையான நூல்களல்லவாம். தேரையர், திருவள்ளுவர், அகத்தியர், தன்வந்திரி, முதலியபெரியோர்களின் பெயரைவைத்து சிலமூடர்கள் கிரந்தங்களை எழுதிவிட்டார்களாம். ஆகவே இந்நூல்களை நம்பக்கூடாதென்றும் இவைகளைப்படித்த வைத்தியர்கள் யமதூதர்களென்றும் இந்நூல்கள் உலகத்திற்கு அவசியமேயில்லையென்றும் சில நவீந ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். இதரமுறைக்காரர் நம்மைத்தூற்றுவது சகஜம். நம்முள்ளேயேயிருந்து நம்மைத்தூற்றிவரும் ஹிதசத்துருக்கள் மிக கொடியவர்கள். இவர்கள் யுக்தாயுக்தம் அறியாது வைத்தியஜாதியையே வெறுக்கின்றனர்· சாஸ்திரங்களையும் தூஷிக்கின்றனர். ஆனால் காரணம் மாத்திரம் சொல்லத்தெரியவில்லை. காரணத்துடன் கூடியவாதத்திற்குபதில் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் சொல்லாமல் சண்டையிடுபவர்களுக்கு நல்லபுத்தி புகட்டும்படி ஈசனை வேண்டுகிறோம்.

## மருந்து நூல்கள் அவசியமா

முதலில் இவ்விஷயத்தை கவனிப்போம். உலகத்தில் பலபாகங்களில் யுத்தம் பிரபலமாக நடக்கின்றது. இதில் பலர் குண்டுகளாலும் கத்தி முதலியஆயுதங்களாலும் துன்புறத்தப்படுகின்றனர். இவர்கள் உடம்பில் பதிந்திருக்கும் குண்டுகளையும் மற்ற ஆயுதங்களின் நுனிகளையும் எடுக்கவேண்டாமா. இதன் விவரங்களை நமது பெரியோர்கள் கிரந்தங்களால் வெளியிடாவிட்டால் நகைக்கப்படமாட்டார்களா. பின்னும் தென்னைமரத்திலிருந்து பலர் கீழேதவறி விழுந்துவிடுகிறார்கள். பலர் தெருத்திண்ணையிலிருந்தே விழுந்துவிடுகிறார்கள். அவர்கள் சரீரத்தில் எலும்பு ஒடிந்துவிடுகிறது. அல்லது மூட்டு நழுவிவிடுகின்றது. அக்காலங்களில் அதை சரிசெய்யவேண்டாமா. இதற்காக நூல்கள் அவசியமல்லவா. ராமாயணத்தில் இந்திரஜித்தின் பிர்ம்மாஸ்திரத்தால் வானரவீரர்களும் ஸ்ரீராமலக்ஷ்மணர்களும் உயிரிழக்கவில்லையா. அக்காலத்தில் மருந்துகளின் சகாயத்தால் எல்லாரும் உயிர்தப்பினதாக ராமாயணம் கூறவில்லையா. இதற்காக ராமாயணத்தை வால்மீகிமகர்ஷியின் பெயரைவைத்து யாரோ ஒரு மூடன் எழுதியதாக நாம் திட்டுவதா? நாளைக்கும் இவ்விதம் காயம்பட்டவர்கள் வைத்தியர்களின் சகாயத்தால் உயிர்தப்பவில்லையா. உபவாஸத்தாலும் வியர்வைஸ்நாநத்தாலும் எனிமாவாலும் இவர்களை காப்பாற்ற முடியுமென்று எந்த விவேகியாவது நினைக்கமுடியுமா. (மற்றும் இதன்விவரங்களை மாசி சந்திரிகையில் பார்க்கவும்.)

"இயற்கைத்தீனியைத்தின்னும் ஆடுமாடுகளுக்கு வியாதிவருவதில்லை. அதுபோல மனிதர்களும் தகுந்த உணவை உட்கொண்டால் வியாதி வரமாட்டாது. இந்த முன்ஜாக்கிரதையாலும் ஸ்வதேசவைத்திய நூல்கள் அவசியமல்ல." என்று சிலர் சொல்லுகின்றனர். இதுவும் உண்மைக்கு விருத்தம். மனிதனுக்கு வரும் எல்லாவியாதிகளும் ஆடுமாடுகளுக்கு வாராவிட்டாலும் அவைகளுக்கு சில குறிப்பிட்ட வியாதிகள் உண்டாகின்றன. உதாஹரணமாக மாடுகளுக்கு கால்வியாதி என்று சாமான்ய ஜனங்களால் அழைக்கப்படும் கடுமையான ஓர்வியாதி உண்டாகின்றது. இது வெய்யில்காலத்தில் வெய்யிலின்கடுமையால் உண்டாகின்றது. இவ்வியாதிக்கு பலமாடுகள் இரையாகின்றன. வெளிகாரணங்களால் அதாவது பூச்சிபுழுக்களால் மனிதனுக்கு வியாதி வருவதுபோல மிருகங்களுக்கும் உண்டு. மிருகங்களின் சரீரத்தில் காயம்பட்டால் அதில் கொசுக்கள் மொய்த்து எச்சமிட்டு அதனால் அந்தப்புண்களில் புழு உண்டாகின்றது. மனிதர்களுக்குப்போலவே அவற்றிற்கும் கர்ப்பூரம் முதலியவைகளை புண்களில் வைத்து புழுக்களைக்கொல்லவேண்டியிருக்கின்றது. மனிதனுக்கு ரக்தக்கடுப்பு வருவதுபோல மாடுகளுக்கும் விசேஷித்து கன்றுக்குட்டிகளுக்கு ரக்தக்கடுப்பு காண்கின்றது. மனிதனுக்கு பேதிகாணுவதுபோல மாடுகளுக்கும் கழிச்சல் காண்கின்றது. இதுபோல ஆடுகளுக்கும் பல வியாதிகள் காணுகின்றன. மழைகாலம் பனிகாலத்தில் மனிதர்களுக்குப்போலவே செம்மறியாடுகளுக்கு மூக்கில் சளி அதனால் தும்மல் முதலியவியாதிகளும் பிராண ஹானியும் நேருகின்றது. வயிற்றுவலி முதலிய வியாதிகள் குதிரைக்கு காணுகின்றது. இவ்விதம் மிருகங்களுக்கும் வியாதியும் மரணமும் நேருவது சகஜமாக பார்க்கலாம். மனிதனுக்கு ஆகாரத்தாலும் சீதோஷ்ணகாலசுபாவத்தாலும் வியாதிகள் வருவதுபோலவே மிருகங்களுக்கும் இந்தகாரணங்களால் வியாதிகள் வருகின்றன. ஆகையால் குதிரைகளுக்கு வரும் வியாதிகளின் பரிகாரத்திற்காக சாலிஹோத்ரமகரிஷி, நகுலன், (பாண்டவர்களில் ஒருவன்முதலியவர்கள் கிரந்தங்களெழுதியிருக்கின்றனர். (நகுலன் எழுதியகிரந்தம் கல்கத்தாவில் அச்சிடப்பட்டிருக்கிறது.) பாலகாப்யமகரிஷி பாலகாப்ய ஸம்ஹிதை என்று ஒரு கிரந்தம் யானைகளுக்காக எழுதியிருக்கின்றார். (இது பம்பாயில் அச்சிடப்பட்டிருக்கிறது.) ஆகையால் ஆடுமாடுகளுக்கு வியாதி வருவதில்லையென்று சொல்லுவது பேதமையே.

21053



ஸ்வதேசவைத்தியநூல்கள் அனாதியென்[illegible] போலிமகரிஷிகளால் எழுதப்படவில்லையென்றும் நிரூபிக்கிறோம். ஸ்வதேசநூல்களில் கூறப்படும் திரிதோஷங்கள் வேதத்திலேயே அங்கீகரிக்கப்பட்டவைகள். "திரிதாது சர்மவஹதம் சுபஸ்பதி" சரீரத்தில் வியாதியை நிவர்த்தித்து ஆரோக்யமாகிற சுபத்தைக்கொடுப்பதில் அதிபதிகளான (பிரதான வைத்தியர்களாகிய) அசுவனீதேவதைகள் என்சரீரத்தில் பிரகோபத்தையடைந்த வாதபித்த சிலேஷ்மங்களென்கிற திரிதாதுக்கள் அல்லது தோஷங்களை சமனப்படுத்தி சௌக்யத்தை உண்டுபண்ண பிரார்த்திக்கின்றேன் என்று ரிக்வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதால் வைத்தியர்களும் திரிதோஷங்களை சமனப்படுத்தவென்கிற ஆரோக்யம் இவைகள் வேதோக்தங்கள். "யுவம்ச்யவாநமச்விநாஜரந்தம் புனர்யுவாநம் சக்ரது; சசீபி:" ச்யவநர் என்கிற மகரிஷி கிழத்தனத்தை அடைந்து கஷ்டப்படும் காலத்தில் அசுவினீதேவதைகள் தகுந்த மூலிகைகளால் அவரைமறுபடியும் வாலிபராகச்செய்துவிட்டார்கள். என்கிற ரிக்வேத வசனத்தாலும் முன்சொன்ன விஷயம் ஸ்திரப்படுகின்றது. இவ்விதம் பலஉதாஹரணங்கள் ரிக்வேதம்முதலியவைகளிலிருந்து காட்டக்கூடும். ஆனால் இவைகளும் போலிவசனங்களென்று சொல்லலாம். இதற்கு நாம் பதில்சொல்லக்கூடியது என்னவென்றால் இவர்கள் சொல்வதும் போலிவசனங்களென்றால் நாக்கு அறுந்து போகாது என்பதே. ஸ்ரீ திருவள்ளுவர் எழுதிய தமிழ்வேதமென்று எல்லோராலும் புகழப்படும் திருக்குறளில் மருந்தைப்பற்றி ஒரு அத்தியாயம் எழுதியுள்ளார். மருந்தென்றும் அவ்வத்தியாயத்தில் பத்துக்குறள்களில் இதனை விஸ்தாரமாக வர்ணித்துள்ளார். (முதல் சந்திகையில் 16 வது பக்கத்தில் இதன் விபரம் காண்க) ஸ்ரீ வால்மீகிராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் லங்கைக்கு சென்றுவந்த ஆஞ்சனேயரைப்பார்த்து ஸ்ரீராமன் கேழ்க்குமிடத்தில் "ஏதேஷு [illegible] பேஷஜோ ஹரோயதா" ஆஞ்ஜநேயா [illegible] அப்பா. அவ்வார்த்தையை தயவுசெய்து சொல்! ரோகாளி மருந்தை அருந்தி ஜீவிப்பதுபோல உன்வசனங்களைக் கேட்டால்தான் நான் பிழைப்பேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருக்குறளும் வால்மீகிராமாயணமும் போலி கிரந்தங்களா. இவர்கள் மிகுந்த பெரியோர்கள் அல்லவா. அவர்களும் பொய் சொல்லுவதாக நினைக்கலாமா. தவிர அவர்கள் பொய் சொல்லுவதாலும் புஸ்தகம் எழுதுவதாலும் அவர்களுக்கு கிடைக்கும் பலன் என்னவென்று யோசிப்போம் இக்காலத்தில் அச்சுபோடவும் எழுதவும் கிடைக்கும் சௌகரியம் அக்காலத்-

தில் கிடையாது. கஷ்டப்பட்டு லோகோபகாரார்த்தமாகவே கிரந்தம் செய்ததாக சொல்லவேண்டும். இக்காலத்தில் வேறு பிழைப்பு இல்லாவிட்டால் உடனே புஸ்தகத்தைசரியோ அல்லது தப்போஎழுத ஆரம்பித்துவிடுகிறார்கள். அப்படி அவர்கள் எழுதி அச்சிடுவதால் அறிந்தோ அறியாமலோ புஸ்தகங்கள் விற்பனையாகி திரவியம் சேருகின்றது. சிலர் பிரசித்திக்காக சிலவையும் எதிர்பாராமல் புஸ்தகங்களையும் அச்சிட்டு பரப்புகின்றார்கள். அவ்விதமே பத்திரிகைகளையும் நடத்துகிறார்கள். தாங்கள் நடத்தும் பத்திரிகையால் உலகத்திற்கு எந்த மட்டில் உபகாரம் என்பதைக்கூட கவனியாமல் தொழிலை நடத்துகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் பண ஆசை கியாதி ஆசை ஆகிய இவைகளே. திருவள்ளுவரும் வால்மீகியும் மற்றும் நமது வைத்திய நூல்கள் புராணங்கள் ஆகியஇவை முதலியவைகளின் கர்த்தாக்களும் ஆதிகாலத்தில் இவ்விரண்டு ஆசையைப்பின்பற்றியே எழுதியிருப்பதாக யாராவது உறுதிசொல்லமுடியுமா. ஆகையால் நமது நூல்களை போலிகிரந்தங்கள் என்று சொல்லுபவர்கள் போலிமனிதர்களே. ஸ்ரீ பகவத்கீதையில் ஸாத்வீக ராஜஸதாமஸ ஆகாரங்களைப்பிரிக்குமிடத்தில் "ரூக்ஷவிதாஹிந:" என்றுசொல்லப்படுகின்றது. ரூக்ஷம் என்றால்தைலசத்தில்லாத வஸ்துக்கள். விதாஹி என்றால் சிலவஸ்துக்கள் இரைப்பையிலிருந்து சிறுகுடலுக்குப்போனஉடன் குடலின் தொழிலை தடைப்படுத்தி ஜீர்ணமாகாமல் சில நிமிஷங்கள்வரை தொந்திரவை விளைவிப்பது என்று பொருள். ஸாத்வீக ஆகாரங்களில் ஹிருத்யா: என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹிருதயத்திற்கு பலத்தை உண்டுபண்ணுபவைகள் என அதற்கு அர்த்தம். யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் மனது நிர்மலமாக இருக்கவேண்டியிருப்பதால் அதற்கு பிரதானமான ஹிருதயத்தை நல்ல ஆகாரங்களால் பலப்படுத்த வேண்டும். இவைகளெல்லாம் வைத்திய நூல்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. கீதை உபநிஷத்முதலிய சாஸ்திரங்களை பிரதானமாகக் கொள்பவர்களும் அதன்படி அனுஷ்டிப்பவர்களும் வைத்தியசாஸ்திரத்தை இகழ்ந்தால் கீதாத்ரோகிகளாகவே பொது ஜனங்களால் மதிக்கப்படவேண்டிவரும். இவைகளை நன்கு உணர்ந்து ஸ்ரீ வேதாந்ததேசிகன்:—

"ப்ராண ரக்ஷணசாஸ்த்ரார்த்த லங்கனம் த்வதிஸாஹஸம்', மோக்ஷத்தையடைய விரும்பும் அதிகாரிகளும் பிராணனை வைத்துக்கொண்டே எல்லாசாதனங்களையும் சம்பாதித்துக்கொள்ளவேண்டியிருப்பதாலும் நோயுற்றவர்கள் மருந்து சாப்பிடவேண்டுமென்பது ஈசன்கட்டளையாகையாலும் வைத்திய சாஸ்திரத்தை மீறலாகாது.

றியவர்கள் நாஸ்திகர்களே எனக்கூறி முடித்தார். மருந்து சாஸ்திரங்களையும் வைத்தியர்களையும் திட்டிக்கொண்டுவரும் நவீன ஆராய்ச்சியாளர்களுடைய மற்றொரு அபூர்வமான புத்திப்போக்கும் வேடிக்கையாக இருக்கின்றது. பிறர் சுதேசநூல்களில் கூறும் தோஷங்களை மாத்திரம் பிரமாணமாகக்கொண்டு சுதேசநூல்களை தூஷிக்கின்றனர். சுதேசவைத்தியர்கள் பிறமுறைகளில் கூறும் தோஷங்களையும் பிரமாணமாகக்கொண்டு பிற முறைகளையும் தூற்றுகின்றனர். அவரவர்கள் சொல்லும் தோஷங்களைமாத்திரம் ஒப்புக்கொண்டு குணங்களை மாத்திரம் தள்ளிவிடுவதற்கு காரணம் யாதோ. திருக்குறள், வேதம், கீதை முதலிய சகலசாஸ்திரத்திற்கும் விரோதமாக ஓர் அபிப்ராயம் எவ்வளவுநாள் ஜீவித்திருக்குமென்று நாளடைவில் பார்ப்போம்.

## சுதேசமுறைகளில் பட்டப்பரீக்ஷை

"1926-ளு மார்ச்சு-மீ 17-உ சென்னை செனேட் சபையின்கூட்டத்தில் சுதேசமுறைகளிலும் ஸர்வகலாசாலை பரீக்ஷைகள் ஏற்படுத்தவேண்டுமென்று ஸ்ரீமான் கே. பாலசுப்ரமண்ய அய்யர் பிரேரிபித்தார். சுதேசவைத்தியத்தின் அவசியத்தைப்பற்றி அதிகம் கூறவேண்டுவதில்லையென்றும் கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்ட கமிட்டி இந்தமுறைகளும் சரியானவை யென்று முடிவு கூறியிருக்கிறதென்றும் ஆகையால் சுதேசவைத்தியத்தில் ஸர்வகலாசாலைஒருபட்டத்தை ஏற்படுத்தவேண்டுமென்றும் அதனால் இந்தியவைத்திய முறையை வலுப்படுத்த இது ஒரு வழியாகுமென்றும் சொன்னார். டாக்டர் குருசாமி இதை எதிர்த்துப்பேசுகையில் தாம் மிகுந்த வருத்தத்துடன் இதை ஆக்ஷேபிப்பதாகவும் சுதேசவைத்திய முறைகள் இன்னும் போதுமானவரை அபிவிருத்தியாகவில்லையென்றும் அவற்றைப் பற்றி நன்கு பரிசீலனை செய்யுமுன்னர் அதில் பட்டபரீக்ஷை ஏற்படுத்துவதில் பிரயோஜனமில்லை யென்றும் சொன்னார். இத்தீர்மானத்தை அகாடமிக்கௌன்சிலுக்கு அனுப்பலாமென ஸ்ரீமான் ஜி. எ. நடேசன் பிரேரேபித்தார். ஸ்ரீமான் வெங்கட்டரமணி இதை எதிர்த்துப் பேசுகையில் இவ்விதம் எல்லாத்தீர்மானங்களையும் அகாடமிக் கவுன்சிலுக்கு அனுப்புவதென்றால் செனெட்சபை சாமான்யமாக அழகுக்கு இருப்பதாகவே ஆகுமென்றும் செனெட்சபையே முடிவுசெய்யலாமென்றும் சொன்னார். ஸ்ரீமான் ஜி. எ. நடேசன் பிரேரபணை ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது." சுதேசமித்திரன்.

டாக்டர் குருசாமி அவர்கள் சொல்வது பைத்தியம் தெளியாமல் கலியாணம் கிடையாது. கலியாணமில்லாமல் பைத்தியம் தெளியாது என்ற கதையை ஞாபகப்படுத்துகிறது. ப.-ர்.

## ஓர் எச்சரிக்கை

சுதேசமுறைகளுக்கு அரசாங்கத்தார் ஓர் அந்தஸ்தை கொடுத்திருக்கின்றனர். அந்த அந்தஸ்தை மரியாதையாக காப்பாற்றிக்கொள்வதும் அதிகப்படுத்திக்கொள்வதும் சுதேசவைத்தியர்களையே பொருத்திருக்கின்றது. இதரமுறைக்காரர் தவறு இழைப்பினும் அதனால் அவர்கள் முறைபாதிக்கப்படமாட்டாது. சுதேசவைத்தியர்கள் சற்று தவறு இழைப்பினும் அது பெரியதாக பாவிக்கப்படும். அதனால் நமது அபிவிருத்தி மிகவும்தடைப்படும். தற்காலம் முனிசிபாலிடி முதலியவைகளின் ஆதரவில் நடக்கும் சுதேசவைத்தியசாலைகளில் உத்தியோகம் வகிப்போர் தங்கள் சம்பளத்தை மாத்திரம் பெரிதாக மதியாமல் ஜனங்களின் மதிப்பை நன்குபெற முயலவேண்டும். கலாசாலைகளில் பரீக்ஷைதேறியதுமாத்திரம் ஆதாரமாக கொள்ளக்கூடாது. தகுந்த அனுபவமும் சாமார்த்தியமும் வாய்ந்தவர்களையே உத்தியோகங்களுக்கு நியமிக்கவேண்டும். பரீக்ஷை தேறுவதே சாமார்த்தியத்திற்கு அறிகுறியல்ல. ஆதியில் சிஷ்யர்களை பொருக்கியெடுத்தே பெரியோர்கள் வித்தை கற்றுக்கொடுத்தனர். பயின்றவர்களும் கியாதிபெற்றனர். இக்காலத்தில் அவ்விதமில்லாமல் எல்லாரையும் எல்லாவற்றையும் படிக்க அனுமதிப்பதுடன் சிந்தனைசக்தியால் பரீக்ஷைதேறியவுடன் அவர்கள் நிபுணர்களாக கருதப்படுகிறார்கள். ஆரம்பதசையில் இருக்கும் நாம் பரீக்ஷையை மாத்திரம் கவனிப்பதென்கிற ஆங்கில முறையை அனுசரிக்காமல் தகுந்த நிபுணர்களையே மேற்படி உத்தியோகங்களுக்கு அனுப்ப ஏற்பாடுசெய்யவேண்டும் அதற்கு நமக்குள் கட்டுப்பாடு அவசியம். அதற்காக ஒருசங்கம் ஏற்படுத்தி அச்சங்கத்தால் சிபார்சு செய்யப்படுபவர்களையே உத்தியோகத்திற்கு நியமிக்கும்படி அதிகாரிகளை கேட்டுக்கொள்ளவேண்டும். தவிர ஒரு வைத்தியசாலையிலிருப்பவர் மற்றவர்களுடைய அனுபவத்தையும் அறிந்துகொள்ளவேண்டும். சில சந்தேகமான வியாதிகளில் சிகிச்சை செய்யும் விதத்தை மற்றவர்களைக் கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விதம் செய்வதால் தாழ்மை என்று நினைக்கக்கூடாது. "தத்வித்ய ஸம்பாஷா" என்று சரகத்தில் வைத்தியர்கள் ஒருவருக்கொருவர் கலந்து தங்கள் அறிவை விசாலப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்திரிகை வாயிலாக தங்கள் அனுபவத்தை பிரகடனம் செய்யலாம். அவ்விதமே தங்கள் சந்தேகத்தையும் நிவர்த்தி செய்துகொள்ளலாம் நம்மிடமுள்ள குறைகளை மறைப்பதில் பய[illegible]. குறைகளை விரைவில்பரிகரிப்பது விவேகம். சுதேசவைத்தியர்கள் நீங்கலாக மற்றவர்கள் பலவிதமாக ஒருவருக்கொருவர் அபிப்பிராயத்தையறிய முடிகின்றது. அதனால் பலசௌகரியங்கள் அவர்களுக்கு கிடைத்திருக்கின்றன. உண்மையில் உத்தியோகம் வகிக்க முடியாமல் வருந்துபவர்கள் சுயநலத்தைப்பாராட்டாமல் தங்கள்ஸ்தானத்திற்கு தகுந்த மற்றொருவரை கூசாமல் நியமித்துவிட்டு தாங்கள் விலகிவிடுவது அவர்கள் கைகொண்ட சாஸ்திரத்திற்கு செய்யும் மகத்தான தியாகம் என்றே சொல்லுவோம்.

## சென்னை கார்பொரேஷன்

சென்னை நகரில் வசிக்கும் ஜனங்களின் நன்மையை உத்தேசித்து 30 வைத்தியர்களை நியமிக்கவேண்டுமென்றும் அவர்களில் பத்து யூனானி வைத்தியர்களும் பத்து ஆயுர்வேத வைத்தியர்களும் நியமிக்கப்படவேண்டுமென்றும் கார்பொரேஷன் தீர்மானித்திருக்கின்றது.

# ஆகாரம்.

9-வது சந்திரிகையின் 20-வது பக்கத்தொடர்ச்சி.

அதேசமயத்தில் உஷ்ண வீர்யமுள்ள ஆகாரங்களையும் சேர்த்து உண்ணுதல் கூடாது. அவ்விதம் விருத்த வீர்யமுள்ள ஆகாரங்களை ஓரேகாலத்தில் சேர்த்துசாப்பிடுவதால் சரீரத்தில் பலவியாதிகள் உண்டாகும். அக்கி, குஷ்டம், கண்ஒளி குறைதல் முதலிய கொடிய நோய்கள் உண்டாகலாம். ஆகையால் வஸ்துவின் யோக்கியதையை நிதானித்தபிறகே உட்கொள்ளவேண்டும்.

மனதுக்கு இன்பமான இடத்தில் சாப்பிடவேண்டும். ஆகாரம் உட்கொள்ளும்பொழுது மனது நிர்மலமாக இருத்தல் அவசியம். சோகம், ஆசைமுதலியவைகளால் மனது பாதிக்கப்பட்டு இருக்குங்காலத்தில் உட்கொள்ளும் உசிதமான உணவுகூட வியாதியாக பரிணமிக்கின்றது. அவ்விதமே சாப்பாட்டு அறையும் மனதுக்கு திருப்திகரமானதாக இருக்கவேண்டும். மனதிற்கு வேண்டாத இடங்களில் ஆகாரத்தை யுட்கொள்ளுவதால் சரீரத்திற்கு தகுந்த போஷணையுண்டுபண்ணாமல் போகின்றது. அவ்விதமே ஆகாரம் உசிதமானதாக விருந்தாலும் மனதிற்கு பிடித்ததாக பொருக்கிக்கொள்ளவேண்டும்.

மதுரப்ராயமாக சாப்பிடவேண்டும். அதாவது நாம் உட்கொள்ளும் ஆகாரங்களில் தித்திப்பு வஸ்துக்கள் பெரும்பான்மையாக இருக்கவேண்டும். வஸ்துக்களில் சில ஆரம்பத்திலேயே அதாவது வாயில் இடும் பொழுதே தித்திப்பாகவும் இருக்கும். இவ்வகையைச்சேர்ந்தவைகள்—சர்க்கரை, வெல்லம் முதலியன. சில ஆரம்பத்தில் வேறு ருசியாகவும் ரக்தத்தில் கலக்கும் தருவாயில் தித்திப்பாகவும் முடியும். இவ்வகையைச்சேர்ந்தவைகள் —இஞ்சி, இந்துப்பு முதலியவைகள். ஆறுவகை ருசியுள்ள பதார்த்தங்களில் சாப்பிடும்பொழுது நாக்குக்குத்தட்டுப்படும் ருசிவேறு. சரீரத்தில் ஜீர்ணமாகிய பிறகு ரக்தத்தில் சேரும் நிலைமையில் உண்டாகும் ருசிவேறு. சர்க்கரை முதலிய சிலவஸ்துக்கள் ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரேவிதமான ருசியுள்ளவையாயிருக்கின்றன. அந்தந்த உணவுப்பொருள்களின் முடிவுகளையும் (இதற்கு விபாகருசியென்று வடமொழியில் பெயர்) அதனால் சரீரத்திற்கு உண்டாகும் குணதோஷங்களும் பிறகு சொல்லுவோம். எல்லாருசிகளைக்காட்டிலும் மதுரரஸமே அமைந்த உணவுப்பொருள்கள் நமது சரீரத்திற்கு அவசியமாகின்றன. அதன் அவசியத்தை நிதானித்தே "மதுரப்ராயம்" என சுதேச நூல்கள் கூறுகின்றன. மதுரம் மேலிட்ட உணவுப்பொருள்களே ஆகாரத்தில் மலிந்து இருக்கவேண்டுமெனப்பொருள். இதன் அவசியத்தைப்பற்றி ஆங்கிலமதத்தையனுசரித்து ஓர் நிபுணர் வர்ணித்திருப்பதை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

"உடலுக்குவேண்டிய உணவுப்பொருள்கள் ஐந்துவிதமானவை. அவைகளில் முதலாவது தானியங்கள். பருப்புகள் காய்கறிகள். கிழங்குகள் பழங்களின் கொட்டைகைகள், இவைகளிலுள்ள மா (Starch) ஆகும். இந்தமாவில் நீரை ஊற்றிக் கொதிக்கவைத்தால் பசையாகும். பசைக்கு ஆங்கிலத்தில் (Starch) என்பர். கட்டியாயிருந்தால் பசை; கொஞ்சம் இளகியிருந்தால் கூழ். அதிகமாய் இளகியிருந்தால் கஞ்சி. இந்தத்தானியம் முதலியவற்றை வறுத்துப் பொடிசெய்தால் (Malt) என்றுபெயர்; ஆகையால் Malt என்பது வறுத்தமாவாகும். இவைகளிலெல்லாம் இருக்கும் தாதுக்கள் கார்பன், ஆக்ஸிஜன் நைட்ரஜன் ஆகிய மூன்றே. ஆதலால் இவைகளுக்குக் கார்போ ஹைட்ரேட் என்று பெயர். இவைகளைத்தின்றால் உடலில் இவை சர்க்கரையாய் மாறும். இவைகள் உடலுக்குள் சர்க்கரையாய் மாறி உடலில் சேராவிட்டால் மலமாய் வெளியில்போய்விடும். கார்போஹைட்ரேட் அதிகமாய்த்தின்று ஜீர்ணமானால் உடலில் சர்க்கரை அதிகமாய் இருக்கும்; ஜீரணமாகாமல்போனால் வயற்றுவலி, வயற்றுப்போக்கு முதலிய நோய்கள் உண்டாகும்.

மேலேசொல்லிய மாவகைப் பொருள் நிறைந்ததானியங்களை, காய்கறிகள் கொட்டைகள் முதலியவற்றைச் சமையல்செய்து தின்பது வழக்கம். இவ்வாறு சமையல் செய்வதற்குக் காரணம் என்ன? மாவணுக்கள் (Starch grains) கட்டியாயிருக்கும். அவைதனை வறுத்தாவது, பொங்கவிட்டாவது செய்தால் மெதுவாகும்; அப்போது தின்றால் வாயில் கரையும். இவ்வாறு பருப்புகள் சமையலாகும்போது மெதுவாய் ஆவதற்காகக் கொஞ்சம் ஸோடாஉப்பு போட்டுச்சமையல் செய்வது வழக்கம். இந்தஸோடா உப்புக்கு முற்காலத்தில் அப்பளக்காரம் என்று பெயர். இது பருப்புகளை மெதுவாகச்செய்யும். ஆனால் இதனால் வேறு கெடுதியுண்டு. அதைப்பற்றிப் பின்னால் சொல்லுவோம். இந்தக் கார்போஹைட் ரேட்டான மாவாய் அமைக்கக்கூடிய பொருள்களை தின்றால் சதை வளராது. ஏனென்றால் இவை ஜீர்ணமானபின்பு உடலில் சக்கரையாய் தங்கும். இவ்வாறு உடலில் தங்கியிருக்கும் சர்க்கரை என்ன ஆகும்? நாம்வேலை செய்யும்போதெல்லாம் இந்த சர்க்கரை கிரமமாய் எரிந்துபோகும். சர்க்கரை எரிந்துபோகும் என்றால் என்ன? அடுப்பில் விறகு எரிகிறதல்லவா? விறகு எரிவதால் உஷ்ணம் உண்டாகும். அவ்வாறே நம்முடலில் சர்க்கரை எரிவதால் உஷ்ணம் உண்டாகும். உடலில் உஷ்ணமிருந்தால் உயிர் இருக்கும். உஷ்ணம் போய்விட்டால் உயிர் போய்விடும் என்று எல்லோர்க்கும் தெரியும். உடலில் உஷ்ணமிருப்பதற்காக, உடலில் இருக்கும் சர்க்கரை எப்போதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும். ஆனால் அடுப்பில் விறகு அதிவேகமாய் எரியும்; அதனால் வெளிச்சமும் உஷ்ணமும் அதிகமாய் உண்டாகும். உடலில் சர்க்கரை எரிவது மெதுவாய்த்தான் நடக்கும். அதனால் வெளிச்சம் உண்டாகாது. உஷ்ணம் மாத்திரம் கொஞ்சம் உண்டாகும்; அடுப்பில் விறகு எரியும்போது 200, 212 டிக்ரி சூடு உண்டாகும் உடலில் சர்க்கரை முதலியன எரியும்போது 98,99, டிக்ரி உஷ்ணம்தான் உண்டாகும். அதற்குமேல் அதிகமாய் உடலில் உணவுப்பொருள்கள் எரிந்து 100 டிக்ரி முதல் 105-வரையில் உஷ்ணமுண்டானால் ஜ்வரம் அடிக்கும். 106, 107, டிக்ரிக்கு அதிகமாக உஷ்ணமுண்டானால் உடல் தாங்காது! மரணம் நேரிடும்.

இவ்வாறு சர்க்கரை முதலிய உணவுப்பொருள்கள் உடலில் எரிந்துகொண்டு 99-டிக்ரிக்குக் குறையாமலும், அதிகரிக்காமலும், ஒரேசீராய் உஷ்ணம் இருந்து கொண்டிருந்தாலன்றி உயிர் இராது; தேகவியவகாரம். நடக்காது. தேகவியவகாரம் நடக்காது என்றால்

அர்த்தம் என்ன? உயிருள்ள பொருள்களுக்கும் உயிரில்லாதவைகளுக்கும் வித்தியாசம் என்ன? உயிருள்ள பொருள்களெல்லாம் எப்போதும் அலைந்து திரிந்துகொண்டும் வளர்ந்து மெலிந்து கொண்டும் இருக்குமல்லவா; உயிரில்லாதவை கிடந்தவிடத்தில் அசைவில்லாமல் கிடக்கும். உயிர்ப்பொருள்கள் அலைந்து திரிய அவைகளுக்குப் பலம் வேண்டும். பலமில்லாவிட்டால் அசையமுடியாது. உயிர்ப்பொருள்களுக்கு அசைவதற்குப்பலம் எப்படி உண்டாகும்? அவை உணவை உண்பதால் பலமுண்டாகும். அது எவ்வாறு? ரெயில்வண்டியின் ஆவி இயந்திரம் (Engine) ஓடுவதை நாம் பார்த்திருக்கிறோம். இந்த ஆவி இயந்திரம் எதனால் ஓடும் என்று கொஞ்சம் ஆலோசிக்கவேண்டும். அந்த இயந்திரத்தில் நீரை ஊற்றி விறகையோ நிலக்கரியையோ எரிக்கிறார்கள். இவை எரியவே நீரானது ஆவியாய் மாறுகிறது. நீரானது ஆவியாகமாறும்போது நீரிலிருக்கிற பலமானது வெளிவருகிறது. அந்த பலமானது இயந்திரத்தை ஓட்டுகிறது. அதேவிதமாக உணவுப்பொருள்கள் நம்முடைய உடலில் எரிந்து உஷ்ணமுண்டாகிறது. அப்போது உணவிலிருக்கும் பலமானது நாம் செய்யும் வேலைகளைச் செய்யுமாறு உதவுகிறது. கரியை எரிக்காமல் போனால் ரெயில் ஓடாது. உணவுப்பொருள்களை எரிக்காமல் தேகவியவகாரம் நடக்காது. இவ்விரண்டிற்கும் வித்தியாசம் ஒன்றுதான். என்னவெனில் ரெயில் ஓட 212 டிக்ரி உஷ்ணம் வேண்டும்; தேகம் ஓட 99 டிக்ரி உஷ்ணம் போதும். எரிந்து பலமுண்டாகும் விஷயத்தில் ஆவி இயந்திரத்துக்கும் தேகத்திற்கும் வேறே ஒரு வித்தியாசமுமில்லை. எரியும் பொருள்களில் மாத்திரம் பேதமுண்டு. இயந்திரத்தில் எரிவது கரி. உடலில் எரிவது சர்க்கரை முதலிய உணவுப்பொருள்கள்.

இதனால் நாம் அறிந்தது என்னவென்றால் சலபமாய் எரிந்து உஷ்ணத்தையும் ஓடியாடி வருவதற்கு வேண்டிய பலத்தையும் தருவதற்காக நாம் உணவுஉண்கிறோம். அவ்வாறு உண்ணும் பொருள்களில் சர்க்கரை முக்கியமானவஸ்து. சர்க்கரையை உடலில் சேகரித்துவைப்பதற்காக நோய்ச்சர்க்கரையைச் சாப்பிடலாம். இல்லாவிடில் சர்க்கரை அதிகமாயுள்ள பழவகைகளை உண்ணலாம். இல்லாவிடில் தின்றபிற்பாடு உடலில் சர்க்கரையாய் மாறிப்போகும் பொருள்களை உட்கொள்ளலாம். இவ்வாறு தின்றபிற்பாடு, உடலில்ஜீர்ணமானபின்பு சர்க்கரையாய்ப் பரிணமம் ஆகும் பொருள்களுக்குக் கார்போஹைட்ரேட்என்றும், மாவகை (Starches) என்றும் பெயர். இந்தமாவகைப் பொருள் தானியங்கள், பருப்புகள், கிழங்குகள், காய்கறிகள், பழக்கொட்டைகள் இவைகளில் அதிகமாய் உண்டு. இந்தமாவகைப்பொ



ருள் கார்பன், ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், இந்தமூன்று தாதுக்களும் சேர்ந்துண்டாகும். ஆகையால் இவைகளுக்குக் கார்போஹைட்ரேட் என்று பெயர். கார்போஹைட்ரேட் பொருள்கள் எவைகளைத்தின்றாலும், அவையெல்லாம் சர்க்கரையாய் மாறும். மாறி எங்கே சேர்ந்திருக்கும்? உடலில் வலது பக்கத் (Liver) தில் மார்பெலும்புக்குக் கீழே யக்ருத் என்று ஒரு ஈரல் உண்டு. அதற்குத்தமிழில் மண்ணீரல் என்று பெயர். இந்த யக்ருத்தில் நாம் தின்று ஜீர்ணமான கார்போஹைட்ரேட் பொருள்களெல்லாம் சர்க்கரையாய் மாறிச்சேர்ந்திருக்கும், நாம் ஓடியாடித் திரியும்போதும், வேறெவ்விதமான வேலைசெய்யும்போதும், யக்ருத்திலிருந்து சர்க்கரை போய், எரிந்து உஷ்ணமுண்டாக்கி, வேலைசெய்யவேண்டிய பலத்தைத்தரும். ஆகையால் கார்போஹைட்ரேட்களுக்கு உஷ்ணஜனனி (Heat produces) உஷ்ணமுண்டாகும் ஆகாரம் என்று பெயர். இயந்திரங்களில் அரைத்த பச்சையரிசியில் கார்போஹைட்ரேட் (மாவகைப்பொருள்.) தவிர வேறொன்றுமில்லை. அதைத்தின்றால் அது சர்க்கரையாய்த்தான் மாறும். புழுங்கலரிசியில் அதிகமாயும், கையால் குத்தின பச்சையரிசியில் கொஞ்சமாயும் வேறு உணவுப்பொருள்களிலுமுண்டு.

தானியங்கள், பருப்புகள், காய்கறி கிழங்குகள் இவைகளிலுள்ள மாவைத்தின்பதினால், அது சர்க்கரையாய் மாறி யக்ருத் என்கிற மண்ணீரலில் சேர்ந்து அந்தச்சர்க்கரை எரிந்து நாம் உயிருடன் இருப்பதற்கு வேண்டிய உஷ்ணத்தைக்கொடுக்கும் என்றும், அதனால் கார்போஹைட்ரேட் என்னும் பொருள்களெல்லாம் உஷ்ணஜனனீ (சூடுண்டாக்கும் பொருள்கள்) என்றும் சொன்னோம். நாம் புசிக்கும் பொருள்களில் மற்றொரு வகை உஷ்ணஜனனிப் பொருள்கள் உண்டு. அவையாவன. நெய் எண்ணெய்கொழுப்பு முதலியன. இவைகளுக்கு ஆங்கிலத்தில் கொழுப்புவகை உணவுப்பொருள்கள் (Fatty food Stuffs) என்று பெயர். இக்கொழுப்புவகை உணவுப்பொருள்கள் எள்கடலை முதலிய விதையிலிருந்தும் ஆடு, மாடு முதலிய ஜந்துக்களின் பாலிலிருந்தும் பல ஜந்துக்களின் உடலிலிருந்தும் வருபவை. விதைகளிலிருந்து வருபவை பலவகை எண்ணெய்கள். பாலிலிருந்து வருவது நெய், ஜந்துக்களின் உடலிலிருந்து வருவது கொழுப்பு. இவைகளெல்லாம் இரண்டாம்வகைஉணவுப்பொருள்கள். இக்கொழுப்புவகை உணவுப்பொருள்களும் கார்பன்ஹைட்ரஜன் ஆக்ஸிஜன் ஆகியமூன்றுதாதுக்களாலானவையே. இப்பொருள்களைத் தின்றால், இவை உடலில் ஆங்காங்கே கொழுப்பை அதிகரிக்கச்செய்யும். இந்தக்கொழுப்புதோலின் கீழே படியும். இந்தக்கொழுப்பு படி

யப்படிய தோல்திரண்டுருண்டும் பளபளப்பாயும் தோன்றும். கொழுப்பு அதிகமாய் இருக்கிறவனை எண்ணெய்க்குடத்திலிருந்து பிடுங்கி எடுபட்டான் என்று நாம் பரிகாசமாய்ச்சொல்வதுண்டு. கொழுப்பு குறைந்தவனது சர்மம் சுருங்கியிருக்கும். இந்தக்கொழுப்புவகை உணவுப்பொருள்களும் உஷ்ணஜனனியே. அதாவது உடலிலிருக்கும் கொழுப்பு எரிந்து உஷ்ணமுண்டாய்க்கொண்டேயிருக்கும். இதனால் உயிருடனிருப்பதர்க்கும் பலவேலைகள் செய்வதற்கும் நம்முடலிலிருக்கும் கொழுப்பு பயன்படும்; உடலில் கொழுப்பு எரிந்து உஷ்ணமுண்டாக்குவது விளக்கில் எண்ணெய் எரிந்து உஷ்ணமுண்டாக்குவதுபோன்றதே. ஆனால் விளக்கில் எண்ணெய் அதிவேகமாய் எரியுமாதலால் அதில் ஒளியும் சூடும் அதிகமாய் உண்டாகும். உடலில் கொழுப்பு மெதுவாய் எரியுமாகையால் உயிருடன் இருக்கும் உடலில் ஒளியில்லாமல் சூடுமாத்திரம் இருக்கும்.

மேலேசொல்லியதால் அறிந்துகொண்டது என்னவென்றால், உயிருடன் இருக்கும்போதெல்லாம் ஜீவ ஜந்துக்களின் உடலில் எப்போதும் தின்ன உணவிலிருந்து உண்டான சர்க்கரையும் கொழுப்பும் எரிந்துகொண்டிருக்கும். இவ்வாறு எரிந்துகொண்டிருந்தாலன்றி உயிர் இராது. சர்க்கரையும் கொழுப்பும் எரிந்துகொண்டிருப்பதுதான் உயிருடன் இருப்பதென்பது. இவை எரிவதினால்தான் தேக வியாபாரம் நடக்கும் மூச்சுவிடுவது நடப்பது பேசுவது முதலிய தேகவிருத்திகளெல்லாம், இவ்வாறு சர்க்கரையும் கொழுப்பும் எரிந்துகொண்டு உடலில் $98\frac{1}{2}$-டிக்ரி உஷ்ணம் இருந்து கொண்டிருக்கும் போதுதான் நிகழும். இந்த எரிச்சல் 95-டிக்ரிக்குக் குறைவாயாவது 105-டிக்ரிக்கு அதிகமாயாவது போனால் உயிர்போய்விடும். 98 டிக்ரிக்குக் குறைந்தால் சைத்தியம் என்றும், 99-டிக்ரிக்கு அதிகரித்தால் ஜ்வரம் என்றும் பெயர். ஜ்வரம் அடிக்கும்போது உடலிலிருக்கும் சர்க்கரையும் கொழுப்பும் அதிவேகமாய் எரிந்துபோம் அதனால்தான் அப்போது உடல் அதிகமாய்ச்சுடும். உடலிலிருக்கும் சர்க்கரையைவிட கொழுப்பானது வேகமாய்எரிந்துபோகும். ஆகையால் ஜ்வரம் அடித்தாலும், வேறுநோய்கள் பிடிக்கும்போதும் உடல் இளைத்துப்போகிறது. உடல் இளைக்க ஆரம்பிக்கும்போது தோலுக்கு அடுத்தாற்போல் இருக்கும் கொழுப்பு எரிந்து குறைந்துபோகும். அதனால் தோல்சுருங்கியும், பளபளப்பற்றும் போய்விடும்.

ஆகையால் நாம் பிரதிதினமும் தேகவியாபாரம் நடப்பதற்காக மாவகைப்பொருள்களையும் கொழுப்பு வகைப்பொருள்களையும் தின்



னவேண்டியது! அதாவது தானியம், காய்கறி முதலியனவும், நெய், எண்ணெய் முதலியனவும் நாளுக்கு நாள் உடலில் சேர்ந்துகொண்டிருக்க வேண்டும். மாவகைப்பொருள்கள் சர்க்கரையாய் மாறியும், கொழுப்புவகைப் பொருள்கள் கொழுப்பாயும், உடலில் பற்பல விடங்களில் படிந்து கொண்டிருந்தால்தான் உயிர் இருந்து கொண்டிருக்கும். இவ்விரண்டுவித உணவுப்பொருள்களும் அவசியமே ஆயினும், கொழுப்பு வகைப்பொருள்கள் சுலபமாய் ஜீர்ணமாகா. அன்றியும் ஜீரணமாகாமல் உடலில் தங்கியிருந்தால் கொழுப்பு வகைப்பொருள்கள் அழுகிப்போய் உடலுக்கு விஷமாகும்; என்றால் பலவிதநோய்களை உண்டாக்கும். சாதாரணமாய் மனிதருக்கு உண்டாகும் நோய்களில் முக்கால்பங்கு கொழுப்புவகைப் பொருள்களை அதிகமாய் உண்பதினால் வருபவையே. சுத்தமான நெய்யைக் கொஞ்சமாய்த்தின்றால் அது இலகுவாய் ஜீர்ணமாய் உடலில் சேரும். ஜந்துக்களின் கொழுப்புகளையாவது, விதைகளிலிருந்துவரும் எண்ணெய்களையாவது உட்கொண்டால் ஜீர்ணமாகாமல் அழுகிப்போய் இந்த அழுகின பொருள் உடலெல்லாம் பரவி பலவிதநோய்களை உண்டாக்கும். இக்காலத்தில் நோய்களுக்குக்காரணம் கண்ணுக்குத்தெரியாத சிறு பூச்சிகள் என்று ஐரோப்பியவைத்தியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எனினும் உடலிலுள்ள இரத்தம் பலமுற்று இருந்தால் இந்தப்பூச்சிகளால் ஒரு தீங்கையும் விளைக்க இயலாது. இரத்தம் பலமற்றுப்போனால் அப்பூச்சிகள் நோயை உண்டாக்கும்.

பலமற்றுப்போவதற்கு முக்கியகாரணம் தின்றதினி ஜீர்ணமாகாமல் அழுகிப்போய் இரத்தத்தில் கலப்பதே. இவ்வாறு அழுகிய பொருள்கள் இல்லாமல் இரத்தம் சுத்தமாயிருந்தால் நோயை உண்டாக்கும் கிருமிகள் உடலில் புகுந்தாலும் அதிகமாகத்தீங்கை விளைவிக்கமுடியாது. நோய்க்கிருமிகள் நம்மைச்சுற்றிப் பலவுள. அவைகளை உடலில் புகாமல் தடுப்பது சுலபமாகும். ஆனால் அவை உடலில்புகுந்தாலும், அவைகள் பெருகாமல் செய்வதற்குவேண்டியதென்னவென்றால், இரத்தத்தில் அழுகிப்போன உணவுப்பொருள்களில்லாமல் காப்பாற்றுவதே. நாம் தின்னும் வஸ்துக்களில் சுலபமாய் அழுகிப்போகக்கூடியவை கொழுப்பும் எண்ணெயும் ஆகும். ஆகையால் இவ்வகைப்பொருள்களை அதிகமாய் உண்ணலாகாது. அன்றியும் சின்னஞ்சிறுவர்களைத்தவிர மற்றவர்கள் கொழுப்புவகை உணவுப்பொருள்களைத் தின்னவே அவசியமில்லை. ஏனெனில் மாவகைப்பொருள்களும் (starchy foods) and பிரதமம் (protien)

உள்ள உண்பொருள்களும் வயது முதிர்ந்தவர்களுக்கு வேண்டிய உணவாகும். இவை யிரண்டுவகை உணவுகளைத்தின்றால் தேகவியவகாரம் செவ்வையாய் நடப்பதற்குப்போதும். சின்னஞ்சிறுவர்களுக்குக் கொழுப்புவகைப்பொருள்கள் கொஞ்சம் வேண்டும். பெரியவர்கள் கொழுப்புவகைப்பொருள்களை பிரத்தியேகமாய்த் தின்னவேண்டியதில்லை. அரிசி, காய்கறிகள், கிழங்குகள், பழக்கொட்டைகள் இவைகளைத் தின்றால் உடலுக்குப் போதும். கொழுப்பு எண்ணெய் நெய், இவைகளை உட்கொள்ளாமலிருந்தால் ஒரு விதத்தீங்கும் வாராது. இவைகளைத்தின்று ஜீர்ணமும் செய்துகொள்ளமுடியாமலிருந்தால்நோய்கள் பலவுண்டாகும். இதைச்செவ்வையாய் அறிந்தபின்பு நவநாகரீகம் முதிர்ந்ததால், நம்முடைய உணவுகளில்கொழுப்பு, நெய் எண்ணெய் முற்காலத்தைவிட எவ்வளவு அதிகமாய் இக்காலத்தில் சேருகின்றன என்று ஆலோசித்துப்பாருங்கள். காய்கறிகள் சமைப்பதிலும், பக்ஷணங்கள் செய்வதிலும் நெய்யும், எண்ணெயும் எவ்வளவு அதிகமாய்ச்சேர்ந்தால் அவ்வளவு நாகரீகம் அதிகம் என்ற கெட்ட எண்ணம் இப்போது பரவியிருக்கிறது, நவநாகரீகம் பெருகின முன் கறிகாய்களை புளிக்கூட்டு, பொரிகூட்டு, பொடிதூவல் என்னும் விதமாய்ச்சமைத்தார்கள். இவ்வகைகறிகளில் எண்ணெயாவது நெய்யாவது அதிகமாய்ச் சேராது. இப்போதோ எண்ணெயிலாவது நெய்யிலாவது கறிகளைப்பாகம்செய்தல் அதிகரித்திருக்கிறது. இதனால் நெய்யும் உடலில் அதிகமாய்ச்சேர்ந்து, அவை ஜீர்ணமாகாமல் அழுகிப்போய் இரத்தத்தில்சேருகின்றன. இதனால் நோய் வளரத்தக்க விதமாய் இரத்தம் ஆகிறது. இதுமாத்திரமா? முற்காலத்தில் அப்பளத்தை தீயில் சுட்டுத்தின்பார்கள். இப்போதோ எண்ணெயில் பொரித்தாலன்றி, நாவுக்குருசிகமாயிராது. பொரிக்கும்போது அப்பளமும் எண்ணெயை அதிகமாக உறிஞ்சும். பழைய காலத்தில் விரேசன சாதகமாக வடாத்தை ஆமணக்கெண்ணெயில் பொரித்துத்தின்பார்கள். ஏனெனில் வடாம் ஆமணக்கெண்ணெயை உறிஞ்சும், அதைத்தின்றால் மலம் வெளிப்படும். இப்போது அப்பளத்தையும் வடத்தையும் பிரதிதினமும் எண்ணெயில் பொரித்துத்தின்கின்றோம். இந்த எண்ணெயெல்லாம் உடலில் புகுந்தவுடன் என்ன ஆகும்? இவ்வளவு எண்ணெயும் ஜீர்ணமானால், உடல் கொழுத்துப் பருத்து, உருண்டு திரண்டு வரும். ஜீர்ணமாகாதுபோனால் எண்ணெ அழுகி இரத்தத்தில் கலந்து, நோய்கள் பலவற்றை உண்டாக்கும். இதுவும் போதாதென்று, இக்காலத்தில் எண்ணெயிலும் நெய்யிலும் செய்தபக்ஷணங்களை அதிகமாகத்தின்னும் வழக்



க்கமுண்டாயிருக்கிறது. காப்பி ஹோட்டல்களில் சிற்றுண்டி தின்னு[illegible]வர்கள் இப்போது மிக அரிது. காப்பி ஹோட்டல்களில் கிடைக்கும் பொருள்களென்ன; வடை, பக்கோடிகள், கச்சோடிகள், அல்வா, மைசூர்பாகு முதலியன. இவையெல்லாம் எண்ணெயோ, நெய்யோ நிறைந்துள்ளவை. முற்காலத்திலோ முறுக்கு, தேன்குழல், சீடை முதலியவற்றைத்தின்பது வழக்கம் இவைகளில் எண்ணெ, மிகக்கொஞ்சமாயிருக்கும். இவைகளைக் கடிப்பதால் பல்லுக்கு உறுதியுமுண்டு. இப்போதோ எண்ணெ, நெய் அதிகமாயிருந்து வாயில்போட்டவுடன் சுலபமாக விழுங்கும் பொருள்களையே தின்கிறார்கள். மேலே விஸ்தாரமாய்ச் சொல்லியபடி, கொழுப்புவகைப்பொருள்களை அதிகமாய் உண்ண உண்ண, இரத்தமானது வியாதி விளையக்கூடிய நிலமாகுமேயன்றி வேறில்லை. இதுவுமன்றி இந்தியாவில் உண்டாகக்கூடிய நெய் கொஞ்சமே. நவநாகரீகம் பெற்ற ஜனங்களுக்கு வேண்டிய நெய்யோ அளவற்றது. ஆகையால் நெய் விற்போர் மாய நெய்யைத்தயார் செய்யக் கற்றிருக்கிறார்கள். மாய நெய் என்றால் எண்ணெகளை நெய்யைப்போல் காணுமாறு செய்வது. எள், ஆமணக்கு, நிலக்கடலை, இலுப்பைக்கொட்டை இவைகளைக்கொண்டு மாயநெய்யைத் தயார்செய்கிறார்கள். இந்த மாயநெய்யை உண்பதைவிட பிரத்தியக்ஷமாய் எண்ணெயையே வழங்குதல் உத்தமம். இதுமாத்திரம் அல்ல, மாயநெய்யை ஆட்டுக்கொழுப்பு, மாட்டுக்கொழுப்பு, பாம்புக்கொழுப்பு முதலியவைகளைக் கொண்டு செய்கிறார்கள். இவைகளாவது சுதேசக்கொழுப்புகள்; தின்றாலும் தின்னலாம். விதேசங்களிலிருந்து பன்றிக்கொழுப்பு முதலியவைகளைக்கூடக் கப்பலேற்றி, கப்பற்கூலி கொடுத்துக்கொண்டுவந்து நெய்யாக்கிக் கடைகளில் விற்கிறார்கள். ஐயோ நெய்யென்ற பெயருக்காகவும் நவநாகரீகமென்னும் சிறப்புக்காகவும் விதேசக்கொழுப்புகளைக்கூட தின்னவேண்டுமா! இந்தியர்கள், ரிஷிகள் சந்ததியில் பிறந்தவர்களே; நவநாகரீகத்திற்காக உங்கள் கதி இவ்வளவு ஆகவேண்டுமா? நீங்கள் நவநாகரீகப் பக்ஷணங்களைத்தின்னும்போது மேலே சொல்லியவிஷயங்களை நினைத்துக்கொண்டே தின்னுங்கள். கௌபீன சம்ரக்ஷணார்த்தம் அயம்படாடோப: என்று கேட்டிருக்கின்றோம். அதைவிடக்கெட்டது நவநாகரீக சம்ரக்ஷணம். காசைக்கொடுத்து நோயைத்தேடிக்கொள்வதுபோல் பணத்தைச் செலவழித்து, நாகரீகம் என்ற பெயருக்காக வியாதிகளைச் சம்பாதித்துக்கொண்டு, அற்பாயுளைத் தேடுகின்றோம்.'' (தொடரும்)

# இண்டியன் மெடிகல் கெஜட்டில் ஓர் ஆங்கிலவியாசத்தின் மொழிபெயர்ப்பு.

## புராதனவைத்திய முறைகள்.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முந்தி பங்காள கவர் மெண்
டார் ஆயுர்வேதமுறை யூனனிமுறை ஆகிய இவைகளை புனருத்தார
ணம் செய்யவும் அதிலும் பிரதானமாக இம்முறைகளை பயிற்றுவிக்க
வும் எவ்வித வழிகளைச்செய்யக் கூடுமென்பதை ஆலோசித்து சிபார்சு
செய்யும்படி இரண்டு கமிட்டிகளை ஏற்படுத்தினர். (ஒவ்வொரு
முறையையும் பரிசீலனைசெய்ய ஒவ்வொரு தனிகமிட்டி,) இவ்விரு
கமிட்டிகளும் அவ்விதமே தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்தாரு
க்கு சிபார்சுசெய்திருக்கின்றனவென்று தெரிகின்றது. ஆனல் யூனனி
கமிட்டியார் செய்த சிபார்சை ஆலோசித்து சுவல்பகாலத்திற்குமுந்தி
செய்ததீர்மானத்தில் பரஸ்பர விருத்தங்களான பலவைத்தியமுறை
களை ஓரே இடத்தில் வைத்து ஆதரிக்க எவ்வளவு முயற்சி எடுத்துக்
கொண்டபோதிலும் பலகஷ்டங்களும் ஊழல்களும் நேரும் என்பதை
அரசாங்கத்தார் அறிந்திருப்பதாக புலப்படுகின்றது. படித்த பல இந்
தியர்கள் பழைய சுதேசவைத்தியமுறைகளை புனருத்தாரணம் செய்
வது அவசியமென்று நம்புகின்றனர். இவர்கள் அபிப்பிராயத்தை
அனுஷ்டானத்திற்கு கொண்டுவர சில மாகாணங்களில் ஏற்கனவே
முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தை
பரிசீலனைசெய்வதும் பலவைத்தியமுறைகளை அரசாங்கத்தார் அங்கீ
கரிப்பதால் அனேகமாக் ஏற்படும் சாதகபாதகங்களை ஜனங்கள் அறி
யும்படி செய்வதும் சாஸ்திர முறையை பின்பற்றும் நமது ஆங்கில
வைத்தியர்களுக்கு அவசியமாகின்றது. விவாதிக்கப்போகும் இந்த
சுதேச முறைகளை முதலில் தெளிவாக தெரிந்துகொள்ளவேண்டும்.
ஆதிகாலத்தில் வைத்தியமுறைகள் மதவிஷயங்களுடன் கலந்திருந்தன
மதவிஷயமான சித்தாந்தங்கள் போலவே வைத்திய சித்தாந்தங்களும்
அல்லது வைத்தியம் கலந்தமதசித்தாந்தங்களும் இருந்தன. அவை
களை ஏற்படுத்தியவர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட
ஆச்சார்யர்கள். அவர்களின் யோக்கியதையும் எல்லோராலும் நிராக்ஷே
பமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஐரோப்பியநாடுகளில் வைத்
தியத்திற்கும் மதத்திற்கு முள்ள நெருங்கிய சம்பந்தம் அறவே ஒழி
ந்தபிறகும்கூட பழைய வாசனையை ஒட்டியே வைத்தியமுறைகள்
இருந்தன. ஹோமோபதி என்ற ஒருவகை ஆங்கிலவைத்தியமுறைக்



கும் அலோபதி என்ற ஒருவகை ஆங்கில வைத்தியமுறைக்கும்
போட்டி கடுமையாக ஏற்பட்டது. ஹோமோபதி வைத்தியமுறையா
வது—மருந்துகளை சிறிய அளவில் உட்கொள்ளுவதால் விசேஷித்த
நன்மை விளைகிறதென்றும் தவிர ஒருமருந்தை ஆரோக்கியமுள்ள
வன் உட்கொண்டால் என்னவியாதி உண்டாகுமோ அதுபோன்ற
வியாதிகளையே அம்மருந்து நீக்கவல்லதென்னும் கொள்கையை உடை
யதே. அலோபதி வைத்தியமுறையாவது—மருந்துகளை அதிகஅள
வில் உபயோகிப்பதும் தவிர வியாதிகளுக்கு எதிர்தட்டான குணங்
களையுண்டாக்குவதுமாகிய கொள்கையை ஆதாரமாக உடையதே.
இவ்விருவைத்தியமுறைகளையும் நவீன சாஸ்திரீய வைத்திய முறை
ஒப்புக்கொள்ளவில்லையென்பது எல்லா ஜனங்களும் அறிந்தபாடில்
லை. நவீன சாஸ்திரீய வைத்தியமுறை ஒவ்வொருவியாதிகளின் மூல
காரணத்தைகண்டுபிடிப்பதும், அம்மூலகாரணங்களை அறவேஒழிப்ப
தும், ஒவ்வொருவியாதிகளுக்கும் கூடுமானவரையில் சிலாக்கியமான
மருந்துகளை கண்டுபிடிப்பதும் ஆகிய இந்த குணங்கள் அமையப்பெற்
றது. அலோபதி வைத்தியமுறை நசித்து விட்டது. ஏனெனில் இம்
முறை பயின்றவர்கள் நவீந சாஸ்திரீய வைத்தியமுறைகளையேநேசிக்
கத்தலைப்பட்டார்கள். பழையவாசனையை ஒட்டியே ஏற்பட்ட வைத்
தியமுறைகளில் நம்பிக்கையை அடியோடு ஒழித்துவிட்டனர். அப்ப
டியிருந்தும் நவீந சாஸ்திரீய வைத்தியர்களை அலோபாத் என்ற பதத்
தால் அநியாயமாகவே அழைக்கின்றனர். நவீந சாஸ்திரீய வைத்திய
த்தில் நம்பிக்கைகொண்ட ஒவ்வொருவரும் தங்களை "அலோபதிவை
த்தியர்" என்று ஜனங்கள் இடும்பெயரை வெறுப்புடன் மறுக்கவே
ண்டும். தவிர தாங்கள் எத்துறைகளிலிருந்தும் ஞானத்தை சம்பாதி
த்துக்கொள்ள சித்தமாயிருப்பதாக உலகத்திற்கு வெளிப்படையாக
ச்சொல்லவேண்டும். ஹோமோபதி வைத்தியர்களும் இதேவழியை
இப்பொழுது பின்பற்றுகின்றனர். அவர்கள் நவீந சாஸ்திரீய வைத்
தியமுறைகளுடன் நெருங்கிய சம்பந்தம் கொள்ளவேண்டி தங்கள்
பழையபெயரையும் பழைய அவிவேககொள்கைகளையும் விட்டுவிட
வேண்டும். பழையகாலத்தில் ஹோமோபதி வைத்தியர்களும் ஜனங்க
ளுக்கு மிகுந்தநன்மைசெய்திருக்கின்றனர். அக்காலத்தில் அலோபதி
வைத்தியர்கள் ஆபத்தான மூலிகைகளையும் மருந்துகளையும் கையா
ண்டு பலநோயாளிகளை சூரையாடிவந்தனர். அந்த சமயங்களில் ஹோ
மோபதி வைத்தியர்கள் மருந்துகளை சிறிய அளவில் கொடுத்து வியா
திகளை பரிகரிக்கும்படி சரீர இயற்கைக்கு சந்தர்ப்பம் அளித்துவந்த
னர். இக்காலங்களிலும் நம்மவரில் சிலர் அலோபதி முறையின் கொடு
மையிலிருந்து விலகாமல் அம்முறையையே கையாண்டு வருகின்ற

னர் என்பதை நாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். தாறுமாறான
பழையபரம்பரையால் உண்டாகும் தீங்கை நாம் திடீரென ஒரேநாளில்
விலக்கமுடியாது. சாஸ்திரீயவைத்திய முறையை நம்பும் ஒவ்வொரு
வரும் உண்மையை நோக்கி முன்வரவேண்டும். நவீந சாஸ்திரீய வை
த்தியமுறையானது அதிககியானத்தை சம்பாதிக்கவேண்டி உண்மை
யான ஆராய்ச்சியை மூலக்கொள்கையாக உடையதென்று நாம் கூசா
மல் சொல்லவேண்டும். உண்மையான வைத்தியமுறை ஒன்றையே
நாம் ஏற்கின்றோம். அதுவே சாஸ்திரீயவைத்தியமுறை. அதுவே
அநுபவம் பராமர்சம் இவைகளை அஸ்திவாரமாகக்கொண்ட முறை.
நம் முறையின் அஸ்திவாரத்தை கவனித்தும் அது உறுதியான நிலை
மையிலிருப்பதைக்கண்டு நம்மை திருப்தி செய்துகொண்டும் பிறகு
நாம் செய்யவேண்டியதாவது —ஜனங்களின் ஆதரவை நாடியிலேயும்
பரஸ்பர விருத்தங்களான பலவைத்தியமுறைகளில் ஏதோ ஒன்றை
நாம் கையாண்டு வருகிறோமென்று ஜனங்களின் மனதில் பதிந்திருக்
கும் தப்பபிப்பிராயத்தை வேருடன் களைய ஜனங்களை படிப்பிக்க
யத்தனிக்கவேண்டியதே. நாம் மேல்நோக்கிப் போக ஒவ்வொரு
துறைகளிலிருந்தும் உதவியைப்பெற காத்துக்கொண்டிருக்கிறோ
மென்பதை உலகத்தார் ஸ்பஷ்டமாக அறியும்படி செய்யவேண்டும்.
நவீந சாஸ்திரீய வைத்தியமுறையில் உபயோகிக்கப்படவில்லை என்ற
இந்த ஒருகாரணத்தாலேயே சில ஆயுர்வேத யூனானிமருந்துகளை நாம்
ஏற்கமறுக்கின்றோம் என்றவாதத்தை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது.
உயர்ந்த மருந்துகளை புதிது புதிதாக கண்டுபிடிப்பதில் தற்காலத்தில்
உள்ள தீவிர ஆராய்ச்சி இதற்குமுன் எப்பொழுதுமே இருந்ததில்லை.
தற்காலம் நாம் உபயோகித்து வரும் மருந்துகளைக்காட்டிலும் உயர்ந்த
ஒருமருந்தை நாம் காண்போமேயாகில் அது வந்தவழியை கவனிக்க
வேண்டிய அவசியமேயில்லை. அதை உபயோகித்தேதீருவோம். ஸாதா
ரணமாக சுதேசமுறைகளை கையாண்டு வரும் ஒருவைத்தியன்
டயபிடீஸ் என்ற நீரிழிவுவியாதிக்கு நிச்சயமாக குணத்தைக்கொடுக்க
க்கூடிய அபூர்வமருந்து ஒன்றை உபயோகித்துவருவதாக வைத்துக்
கொள்வோம். அப்பொழுது அது உயர்ந்தவிலையில் ஏராளமாக விற்ப
னையாகின்றது. ஒன்றும் தெரியாமலும் நோயாளியின் நோயை கவனி
த்து தகுந்தபரிகாரம் செய்யமுடியாமலும் திண்டாடும் ஓர் மூடவைத்
தியன் "ஐயா என்னிடத்திலும் அந்தவியாதிக்கு உயர்ந்த மருந்து
கைவசம் இருக்கின்றது" என்று சொன்னால் அவனுடைய நிலைமை,
ஒருவேளை சோற்றுக்குக்கூட விதியில்லாமல் தவித்துக்கொண்டே
ஒரு பரமஏழை "நான் பித்தளையைத் தங்கமாக்கிவிடுவேன்" என்று



சொல்லுவதற்கு ஒப்பாகாதா. ஒவ்வொருகாலங்களில் இம்மருந்துகள்
தேவமருந்துகள் என போற்றப்படுவதை கவனித்திருக்கிறோம். சற்
றேரக்குறைய நம்பிக்கையுடனேயே இம்மருந்துகளை பரீக்ஷித்திருக்கி
றோம். அவைகள் கொஞ்சமும் உபயோகமில்லாமல்போனதைக்கண்டு
மிகவும் ஏமாற்றமும் அடைந்திருக்கிறோம். டம்பமாக சொல்லிக்கொ
ள்ளப்படும் புராதனமருந்துகளை நன்றாக ஆராய்ந்து பொறுக்கி எடுக்
கப்பட்ட மருந்துகளின் யோக்கியதையையும், ஸால்வர்ஸன் அதன்
உட்பிரிவுமருந்துகள்போல உயர்ந்ததாயும் ஸாரமுமாயும் நவீந சாஸ்
திரீய ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளின் யோக்கிய
தையையும் ஒப்பிட்டுப்பாருங்கள். புராதனமருந்துகளுக்கு குணம்
பூஜ்யமாக இருப்பதைக்கண்டு உண்மையில் ஆச்சரியப்பட வேண்டி
ல்லை. பலநூற்றாண்டுகளாககட்டாமுட்டியாககொடுத்து ஏதோ சுவல்ப
குணம் கண்ட பழையமருந்துகளையேதான் நாம் இப்பொழுதும் பெரு
ம்பான்மையாக கையாண்டுவருகிறோம். ஆனால் பழையமருந்துகளில்
பலவற்றை நாங்கள் கழித்துவிட்டோம். அதற்கு காரணம் அவைகள்
அநுபவத்திற்கும் பரிசீலனைக்கும் ஒத்துவராததுதான். இதுமாத்திர
மல்ல. இன்னும் ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது
கையாண்டுவரும் மருந்துகளில்கூட சிலவற்றை பலனில்லையென்று
கழிக்கக்கூடும். அதற்காக எங்களை தூற்றக்கூடாது. மிகுந்த பலனளி
த்து கைகண்ட பழைய ஆராய்ச்சி தோரணையிலேயே நாங்கள் முன்
நோக்கிச்செல்லுகின்றோம். நவீந சாஸ்திரீய வைத்தியர்கள் சில மரு
ந்துகளை அவைகள் தங்கள் முறைகளில் சொல்லப்படவில்லை என்ற
காரணத்தால் மாத்திரம் தாங்கள் வெறுக்கவில்லையென்று சொல்லுகி
றார்கள். தாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி கியானுபவிருத்திக்கு உபயோ
கமுள்ள அம்சங்கள் அவைகளில் ஒன்றுமில்லையென்றே சொல்லுகி
றார்கள். இப்படியிருக்க புராதன சுதேசவைத்தியமுறைகளை புனருத்
தாரணம் செய்ய இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ள காரணமெ
ன்ன? இவ்விதம் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்பவர்கள்
சொல்லும் சில காரணங்களை ஆராய்வோம். "நவீந சாஸ்திரீயமுறை
இந்தியாவில் ஜனசமூகங்களின் தேவையை பூர்த்திசெய்யத்தவறிவிட்
டதென்றும் குறைந்தவிலையுள்ள மருந்துகளை கையாண்டுவரும்
சுதேசமுறையே அதற்கு பதிலாக ஏற்படவேண்டுமென்றும் சொல்ல
ப்படுகின்றது. சாஸ்திரமுறைகளை அனுஷ்டிப்பதில் சிலகுறைகள்
இருக்கக்கூடும். அதற்காகசாஸ்திரமே தவறிவிட்டதாக சொல்லுவதா?
அவ்விதம் சொல்லுவதற்கு நியாயமில்லை. இந்தியாவில் கொய்னா
மருந்து மலேரியாகாய்ச்சலில் நல்லகுணத்தைக் கொடுக்கத்தவறிவிட்

ட்டு. இது ஒரு ஆச்சரியமா? நமது வைத்திய சாலைகளில் கிடைக்கும் கொய்னமருந்து எவ்வளவு கொஞ்சமாக இருக்கிறதென்பதை யோசித்துப்பாருங்கள். மலேரியாவால் வருந்தும் நோயாளிக்கு மூன்று அல்லது நான்கு அரிசியிடை கொய்னமருந்து கொடுத்தவுடன் வியாதி சௌக்கியமாகி நல்லபெயர் எடுத்துவிடுமென்று எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனமல்லவா. இதற்கு என்னசெய்யலாம். மருந்துவிலை சலீசாக இருந்தால் தாராளமாக உபயோகிக்கலாம். அவ்விதம் தாராளமாக கைகூசாமல் கொடுக்கும்படி விலைநயமான ஒரு மருந்தை கொய்னவிற்குபதிலாக உபயோகிக்கலாம். அப்பேர்பட்ட மருந்து எதுஎன்று நாம் கேழ்க்கின்றோம் மலேரியாபூச்சிகளை கொஞ்சமாவது பரிகரிக்கும் சக்தி பெற்ற விலை நயமான சுதேசமருந்து இருப்பதாக யாராவது சொல்லமுடியுமா? அவ்விதம் இருப்பதற்கு அணுவளவேனும் தகுந்த ருசுகிடையாது. இந்தியாவில் தோன்றும் மற்ற மகாவியாதிகளை விலக்கிவிடுமென்று போற்றப்படும். எல்லாமருந்துகளிலும் இதே நியாயம் பொருந்தும். இனமாககிடைக்கிறதென்ற காரணத்தைக்கொண்டு உபயோகமற்ற மருந்துகளை ஜனங்களுக்கு வழங்க அரசாங்கத்தார் ஒருக்காலும் துணியமாட்டார்கள். மலேரியாவிலும் சீதபேதியிலும் வருந்தும் ஜனங்களுக்கு இந்த சாரமில்லாத சுதேசமருந்துகளை வழங்குவது, க்ஷாமகாலத்தில் பசித்தவர்களுக்கு வைக்கோலையும் தூசியையும் பத்தியவுணவாக அளிப்பதற்கு ஒப்பாகும். சுதேசமுறைகளை அனுஷ்டிப்பவர்களிடம் விலை நயமான மருந்துகள் இருக்குமாகில் அவைகளைக் கண்டுபிடித்து உபயோகத்திற்கு கொண்டுவருவது நமது கடமை. உபயோகமற்றமருந்துகளை பிரித்துச் சொல்லும் சிலபோலிவைத்திய சாஸ்திரங்களை ஆதரிக்கப்புகும் எந்த அரசாங்கமும் உலகத்தாருடைய நகைப்புக்கு பாத்திரமாகும். விலை நயமாயும் சாரமாயுமுள்ள மருந்துகள் (சுதேசநூல்களில்) இருக்குமாகில் அவைகளை (நம்போன்ற) ஆங்கிலவைத்தியர்களே உபயோகிப்பது நல்லது. ஏனெனில் அவைகளின் யோக்யதையை நாம்தான் பரீக்ஷித்தறிய முடியும். நாம் தான் அதற்கு தகுந்த பயிற்சி பெற்றிருக்கிறோம். மருந்துகளுக்கு விசேஷித்த சக்தியையுண்டுபண்ணும் நம்முடைய நூதன வழிகளால் அவைகளின் விலையேறிவிடுகிறதென்றும் ஆகையால் இந்த நூதனவழிகளை ஒழித்துவிட்டு புராதன வழிகளின்படியே நாம் மருந்துகளை தயாரிக்கவேண்டுமென்று மற்றொரு யோசனை சொல்லப்படுகின்றது. சாஸ்திரீய துறையில் பயிற்சிபெற்ற யாராவது இந்த யோஜனையை ஏற்பானு? சாமான்யவியாதிகளில் நூதனவழி அவசியமில்லாவிட்டாலும் உடலுக்கும் உயிருக்கும் ஹானியை விளை



கடுப்பு—Dysentery ரக்தக்கடுப்பு. கடுப்புஎன்பது பொதுவார்த்தையாகி ரக்தக்கடுப்பு சீதக்கடுப்பு ஆகிய இருவியாதிகளையும் குறிக்கின்றது. இந்தியாவில் இவ்வியாதி மிகவும் உண்டாகின்றது. மற்றும் உஷ்ண பிரதேசங்களிலும் சகஜமாக காணுகின்றது. பெரும்பாலும் இவ்வியாதி காணுவதற்கு முந்தி பலமானகாய்ச்சல் வருவது வழக்கம் சிலசமயங்களில் பலமான காய்ச்சல் இரண்டொருநாள் அடித்து பிறகு இவ்வியாதிதோன்றும். சிலசமயங்களில் காய்ச்சலுடனேயே வருவதுமுண்டு. காய்ச்சலில்லாமலேயே காணுவதுமுண்டு. முதலில் காய்ச்சல் நன்றாக வீசியடிக்காவிட்டாலும் பொதுவில் இவ்வியாதி காணுவதற்குமுந்தி சரீரத்தில் இயற்கைக்கு அதிகமாக உஷ்ணம் உண்டாகின்றது. உஷ்ணத்தை அறியும் கருவிகளால் (தெர்மாமீடர்) இந்தஉஷ்ணம் அறியப்படாவிட்டாலும் வியாதிக்காரர்களுக்குகைகால் காந்துதல் கண் எரிதல்போன்ற சிலகுறிகள் நிச்சயமாக தென்படுகின்றன. முறைக்காய்ச்சல்களில் பலருக்கு ரக்தக்கடுப்பு சில சமயங்களில் உண்டாகின்றது. சூர்யவெப்பம் மிகுந்திருந்து திடீரென மழை தொடரும் காலங்களில் பெரும்பாலும் இவ்வியாதி உண்டாகின்றது. காலதோஷத்தால் உண்டாவதுபோக ஆகாரதோஷங்களாலும் இவ்வியாதி உண்டாகின்றது. அப்பொழுது எல்லாகாலங்களிலும் உண்டாகலாம். பெருங்குடல்வெந்தும் புண்ணாகியுமே இவ்வியாதிகாணுகின்றது. மலம் அதிகமாகப்போகும். ஒவ்வொருதடவையிலும் மலத்துடன் சீதம் ரத்தம் இவைகள் கலந்துபோகும். முதலில் சீதம் அல்லது கபம்மாத்திரம் மலத்துடன் வெளிவரும். சிலநாள்கழித்து ரக்தமும் சேர்ந்துபோக ஆரம்பிக்கும். சிலருக்கு ஆரம்பம் முதலே ரக்தம் சீதம் கலந்து போவதுமுண்டு. நாபியைசுற்றி முதலில்வலிகாணும். ஒவ்வொருதடவையும் மலம் முக்கியே வெளியேறும். அதற்கு ஆங்கிலத்தில் tormina என்று பெயர். வடமொழியில் ப்ரவாஹணம் என்று சொல்லப்படும். சிலசமயங்களில் முக்கியும் ஒன்றும் வெளிவராமலிருப்பதுண்டு. அதற்கு ஆங்கிலத்தில் tenesmus என்று பெயர். அக்காலத்தில் வயிற்றில் வலியும் கடுப்பும் மிகுந்திருக்கும். அனேகமாக ஓக்காளம் அல்லது வாந்தி சேர்ந்திருக்கும். ராத்திரியில் ஆவரணமில்லாத இடங்களில் படுப்பதாலும் அடிவயிற்றில் காற்றுபடுவதாலும் இவ்வியாதி நேரலாம். ஆரம்பத்தில் மலம் கொஞ்சம் கொஞ்சமாக பலதடவை பிரதிதினம் போகும். இதுஇரண்டு அல்லது மூன்று நாள் நீடித்திருக்கும். இதை இவ்வியாதிக்கு முற்குறியாகக்கொள்ளலாம். பிறகு வயிற்றுவலி மிகுந்துவரும். ஆசனத்தில் வலியும் கடுப்பும் தோன்றும். அதன்பிறகு மலத்தில் கபமும் ரக்தமும் கலந்துபோக தலைப்படும். வியாதி வலுக்க வலுக்க மலம்போவதுநின்று மிகு

கிஷாயபானையிலேயே கிஷாயம் ஆறும் வரையில் வைத்திருப்பதால் பானை சுமார் ஒருபடி கிஷாயத்தை உறிஞ்சிவிடும். ஆசையால் அளவு குச்சியின் அடையாளத்திற்கு சற்று அதிகமாக ஜலம் இருக்கும்பொழுதே பானையை எடுத்துவிடவேண்டும். அல்லது சரியான அளவில் எடுத்து உடனே வேறொரு பாத்திரத்தில் கொட்டி ஆறியபிறகு வடிகட்டவேண்டும். இவ்விஷயம் கிஷாயத்திற்குமாத்திரமல்ல. லேகியம், வடகம் முதலியவைகளுக்கும் இவ்விதமே கவனித்துக்கொள்ளவேண்டும். இந்தகிஷாயத்தை கையால் பிழிவதால் சேராங்கொட்டைதைலம் கையில் கருப்பாகப்பற்றும். கடைசியில் நல்லெண்ணையைப்பூசி சீவக்காய் பொடியால் தேய்த்தால் சரியாகிவிடும் சரியாகாவிட்டாலும் பயப்படவேண்டியதில்லை. சரீரத்திற்கு பாதகம் விளைவிக்காது. கஷாயப்பானை கெட்டியாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அடுப்பில் வைத்திருக்கும்பொழுதே ஜலம் கசிய ஆரம்பிக்கும். கிஷாயத்தைவடிகட்டியபிறகு அறைப்படி தேனை சேர்த்து ஒரு நல்லபானையில்விட்டு வாயை மூடி மண்பூசி ஒரு மாதம் அசையாமல் ஒரு இடத்தில் பந்தோபஸ்தாகவைக்கவேண்டும். இந்தப்பானை அல்லது குடம் மண்ணால் செய்யப்பட்டதும் கெட்டியானதுமாக இருக்கவேண்டும். குயவனைக்கொண்டு மண்ணை நன்றாக அரைத்து பக்குவப்படுத்தி இதற்கென்றே அழுத்தமானதாக செய்து கொள்ளவேண்டும். பானை அல்லது குடத்தின்வாயில் ஓர் அகலை கவிழ்த்து மூடி அதற்குமேல் களிமண் அல்லது செம்மண்ணை நன்றாக அப்பி காற்றுபோகாமல் செய்ய வேண்டும். அந்தபானையை காற்று மழை வெய்யில்படாத இடத்தில் வைக்கவேண்டும். அசையக்கூடாது. ஏனெனில் ஒருமாதம் வைத்திருக்கும் பொழுது அதில் ஓர் ஆடை (பாலில் ஆடை உண்டாவதுபோல) உண்டாகும். அதை எடுத்து எறிந்துவிடவேண்டும். அடிக்கடி அசைந்தால் அந்த ஆடைநன்றாககட்டாது. பிறகு ஆஸவம் சுத்தமானதாகஇராது. ஒருமாதத்திற்கு கொஞ்சம் நாள் அதிகமானதால் தோஷம் கிடையாது. ஒருமாதத்திற்குள்ளாக அதை எடுத்துவிடக்கூடாது. அந்தகாலம் இருந்தால்தான் அதன்குணம் பூர்ணமாக உண்டாகின்றது. அந்தகாலம் கழிந்தபிறகு கலக்காமல் அந்த ஆசவத்தை வடிகட்டிக்கொள்ளவேண்டும். அடியில் இருக்கும் திப்பியை நீக்கிவிடவேண்டும் இன்னும் அதிக சுத்தமாக இருக்கவேண்டுமென்று நினைத்தால் அப்பொழுது ஒன்று அல்லது இரண்டு தேத்தாம் விதையை மேற்படி ஆஸவ ஜலத்தைக்கொண்டே சந்தணக்கல்லில் உரைத்து கலக்கி ஒருநாள் கழித்து வடிகட்டிக்கொள்ளவும். ஆஸவம் மிகவும் தெளிவாக இருக்கும். இவ்விதமே எல்லா ஆஸவங்களிலும் செய்யலாம்.



விக்கக்கூடிய கொடியவியாதிகளில் புராதன முறைப்படி தயாரிக்கப்பட்ட ஔஷதங்கள் சற்றும் பயனளிக்கா. நமது வைத்தியப்படிப்புக்கு மிகுந்த சிலவு நேருகிறதென்றும் சுவல்பசிலவில் சுதேசமுறைகளில் பயிற்சியடைய முடியுமென்றும் அவர்களைக்கொண்டு பொது ஜனங்களுக்கு வைத்திய வசதியளிக்கக்கூடுமென்றும் மற்றொரு வாதம் சொல்லப்படுகின்றது. இதைப்பற்றி யோசிப்போம். பொது ஜனங்களுக்கு வைத்தியவசதியளிக்க எப்பேர்பட்டமருந்துகள் இந்த சுதேசவைத்தியர்களின் கையில் கொடுக்கப்படலாம் என்றுகேழ்கிறோம். சுக்கு, திப்பிலி போன்ற சாமான்யமருந்துகள் என்றால் நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்தமண்போன்ற மருந்துகளைக்கொடுக்க இவர்களுக்கு பயிற்சி எதற்காகவென்றே கேழ்கிறோம். எட்டிக்கொட்டைபாஷாணம் போன்ற வேகமானமருந்துகள் என்றால் இந்த யோசனையை சத்தியமாக நாம் ஒப்புக்கொள்ளவேமாட்டோம். இம்மருந்துகளை எந்தவியாதியில் உபயோகிக்கவேண்டுமோ அந்தவியாதியை கண்டுபிடிக்க வழிதெரியாமலும் அம்மருந்துகளின் யோக்யதையை அறியாமலுமிருக்கும் ஒரு முட்டாள் கையிலா இவைகளை கொடுத்துவைப்பது. வியாதிகளை நன்குநிதானிப்பதிலும் மருந்துகளை உபயோகிப்பதிலும் மிகுந்த திறமை வேண்டியது அவசியமாகும். அவசியம் வேண்டிய இவ்விருவகை திறமைகளும் பறிமுதல் செய்யப்படுவதை நாம் அங்கீகரிப்போமாகில் மனிதர்களுக்கு வைத்தியவசதியளிப்பதை நாம் எவ்வளவு சீக்கிரத்தில் நிறுத்திக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு உலகத்திற்கு நல்லது. எங்கள்டாக்டர்கள் மிகவும் கெட்டிக்காரர்களென்று முழங்குவதாக நாம் நினைக்கவில்லை. இதற்கு எதிர்தட்டாகவே நினைக்கின்றோம். விஷயத்தை நன்கு பரிசீலனைசெய்த நமது பண்டிதர்கள் மேன்மேலும் தங்கள் திறமை அபிவிருத்தியாகும்படியும் இன்னும் அதிகமாக சாஸ்திரபத்ததிகளை கையாளும் படியும் செய்வதே தங்கள் கொள்கை என்பதையும் மறுபடியும் பழைய அநாகரீகவைத்திய முறைகளை நோக்கிப்பின் செல்லக்கூடாதென்பதையுமே வற்புறுத்துகின்றனர். தண்டவாளத்தில் ஓடும் ரெயில் அசாத்திய செலவுள்ளது. மாட்டுவண்டியோ சுலபமாகவும் விலை சலீசாகவுமுள்ளது. ஆனால் நீராவியந்திரங்களை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பல மாட்டுவண்டிகளை நிர்மாணம் செய்துதரவேண்டுமென்று அரசாங்கத்தாரை வேண்டுவதை நாம் கேட்டதேயில்லை. உண்மையென்னவென்றால் நவீன சாஸ்திரீயசாதனங்கள் அதிகசிலவுள்ளவைகள்தான். நாளடைவில் மிகவும் மலிந்துவிடுகின்றன. சாஸ்திர ஆராய்ச்சியேயில்லாத காலத்தில் இருந்த பழய முறைகளை அழி

ந்து அதன் ஸ்தானத்தில் நிலைபெறுகின்றன. ரெயில் பாதைகள் பல
விருந்தபோதிலும் இன்னும் மாட்டுவண்டிகளும் தேவையாகவிருப்
பது வாஸ்தவமே. இந்த சாமான்யவண்டிகளைத்தயார் செய்வதற்காக
அரசாங்கத்தின் ஆதரவு அவசியமா என்றேகேழ்க்கிறோம். இதே
மாதிரி சுக்குதிப்பிலி போன்ற சாமான்யமருந்துகள் பலதலைமுறை
வரையில் தேவையாகவிருக்கலாம். ஜனங்கள் தாங்களாகவே இந்த
தேவையை பூர்த்திசெய்துகொள்ளக்கூடாதா. ஏராளமாகசெலவு பிடிப்
பதாயும் அவைகளை அநுஷ்டிக்க மிகவும் விசேஷதிறமைவாய்ந்த
ஓர் ஸ்தாபனத்தை அபேக்ஷிப்பதுமாகிய ஓர் முறையைத்தான் தலையி
ட்டு ஆதரிக்கக்கூடுமென்று நாம் அரசாங்கத்தாரை எதிர்பார்க்கலாம்.
இன்னொருவிஷயம். சுதேசமுறைகளின்படி வைத்தியத்தொழில் புரி
பவர் ஆயிரக்கணக்காக இருக்கின்றனர். அவர்கள் நவீன வைத்திய
முறைப்படி விசேஷித்த பயிற்சி பெறுவார்களாகில் மிகுந்த நிபுணத்
வம்வாய்ந்தவர்களாகலாம் என்பதே. இது உண்மையே. அந்தசுதேச
வைத்தியர்கள் இந்த பயிற்சியை ஏற்றுக்கொள்வார்களென்று நாம்
நம்பமுடியவில்லையே. அவர்கள் இந்த பயிற்சியை கொஞ்சமும் பிரு
ர்த்திக்கவில்லையே. அநேகமாக அவர்கள் அப்படி செய்யவும்மாட்டா
ர்கள். சுதேசவைத்தியநூல்கள் எல்லாவிஷயங்களையும் பூர்ணமாக
உபதேசிக்கின்றனவென்றும் அவைகளில் குறைகூறவே முடியாதெ
ன்றுமல்லவோ அவர்கள் நம்புகின்றனர். சுதேசவைத்தியர்கள் ஆங்
கிலவைத்தியர்களின் பாதாரவிந்தத்தை அணுகி ஐயா எங்களுக்கும்
சொல்லிக்கொடுங்கள் என்று வேண்டுவார்களானால் அப்பொழுது
தாங்கள் சகலகலாவல்லவர்களென்ற வெறும்பிரமையை விடவேண்டி
வரும். சுதேசவைத்தியர்களாவது எல்லாவிஷயங்களிலும் தங்கள்
தாழ்மையை ஒப்புக்கொள்ளவாவது. அப்படி ஒப்புக்கொள்ளும்படி
அவர்கள் வைத்தியக்காரர்களா. நாம் ஒருக்காலும் நம்பமாட்டோம்.
சுதேசவைத்தியர்கள் ஆங்கிலவைத்தியர்களோடு நெருங்கிப்பழகிப்
பழகி தங்கள் தப்பானவழிகளை சீர்திருத்திக் கொள்ளக்கூடுமென்று
நினைப்பதும் வீண்பிரமையே. தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற பாழும்
அஹங்காரம் அவர்கள்வழியை மறிக்குமே, பொதுஜனங்கள் சுதே
சவைத்தியமுறைகளில் சிலகுறைகளை யறிந்திருப்பதை சிலசுதேச
வைத்தியர்கள் உணர்ந்திருப்பது உண்மையே. ஆங்கிலவைத்தியர்களு
க்குப்பெருமையை விளைவிக்கும் சில நூதன வழிகளை எளிதில் ரக
சியமாக தெரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்புவதும் உண்மையே
ஆனால் இந்த ஆங்கில முறைகளை அவ்வளவுசுலபமாக கற்றுக்கொ
ண்டுவிடலாமென்பது நினைக்கக்கூட சாத்தியமல்லாதகாரியமே. பல



ர்களாகப்பொறுமையுடன் படித்து ஆங்கிலவைத்தியர்கள் கை
ம் இருபக்கமும் கூறுள்ள கத்தியை (ஆங்கிலமுறையை) சுதேச
வைத்தியர்களும் அவர்களைப்போல கையாளக்கூடுமென்பது சாத்தி
மல்ல. அதிக செலவில்லாமலும் பதிவுசாயும் உள்ள சிலவைத்தியர்கள்
கு தேவையானால் அப்பொழுது சிலரை ஆரம்பத்திலிருந்தேதான்
ம் பயிற்றுவிக்கவேண்டும். ஏனெனில் சுதேசவைத்தியர்களின் மன
தில் ஏற்கனவே ஸ்திரமாக வேரூன்றிய மூடக்கொள்கைகளை அறவே
ஒழித்து அவர்களை வழிக்குகொண்டுவரமுடியாது. ஆகையால் வைத்
தியரல்லாதவர்களுக்கே பயிற்சி கொடுப்பதுநலம். புத்திசாலித்தன
மும் படிப்பும் நன்கு அமையப்பெற்ற பலர் வைத்தியத்தொழில்
பயில தயாராகவிருக்கின்றனர். ஆனால் இப்போதைக்காட்டிலும்
குறுகிய காலத்திலும் குறுகிய செலவிலும் ஓர் முறையை பயிற்றுவி
ப்பது சாத்தியமா அது புத்திசாலித்தனமா என்று யோசிக்க வேண்டி
யிருக்கிறது. சுதேசமுறைகள் இந்தியாவுக்கு பொருந்தியதாகவும் ஜன
ங்களும் அவைகளையே விரும்புவதாகவும் ஆங்கில முறைகளை வெறு
ப்பதாகவும் மற்றொருவாதம் சொல்லப்படுகின்றது. இது அசம்பாவி
தம். காலா அஸார் வைத்தியசாலைகளில் ரக்தநாடிகளில் ஊசியால்குத்தி
மருந்தை உட்செலுத்தும் இஞ்ஜக்ஷன் முறையைப்பெற மனப்பூர்வ
மாக விரும்பி ஜனங்கள் கூட்டம் கூட்டமாக கூடியிருப்பதைப்பாருங்
கள் என்று பதில்சொல்லுவோம். இந்திய குடிமக்கள் மனதில் வேரூ
ன்றிய பொறாமையுண்டென்பது நாம்கேழ்விப்படுகிறோம். விவசாயத்தி
லும் வைத்தியத்திலும் நமது புதியமுறைகளின் ருசியை ஒருதடவை
அவர்கள் அநுபவித்துவிட்டால் நாகரீகம் முதிர்ந்த வெள்ளைக்காரர்
களைப்போலவே அவர்களும் குதூஹலத்துடன் இவைகளை அநுஷ்
டிக்க உண்மையில் தயங்கவேமாட்டார்கள். வைதீக பிராமணர்கள்
சவத்தைத்தொடக்கூடாதென்று பழைய காலத்தில் நினைத்ததுபோல
இப்பொழுது இல்லை. வைத்தியபாடசாலைகளிலும் வைத்திய கல்லூரி
களிலும் ஓருமாணாக்கஸ்தானத்திற்கு பத்துவிண்ணப்பங்கள் பிராமண
ர்களிடமிருந்தேவருகின்றன. சுதேச வைத்தியமுறைகளை புனருத்
தாரணம் செய்யவேண்டுமென்று சொல்பவர்கள் மேற்படி முறைகள்
தத்காலம் சீர்கெட்டிருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால்
புராதன சுதேச வைத்யநூல்களை நன்கு ஆராய்ந்தால் தாங்கள் மேன்
மையுடன் வாழ்ந்த நாள்களில் அநுஷ்டித்த வழிகளைக்கண்டுபிடிக்க
முடியுமென்றும் பழைய பெருமைகளை அடைய முடியுமென்றும்
சொல்லுகின்றனர். தாதாநாளில் சுதேச வைத்தியம் எல்லாவிஷயங்
களையும் நிறையப்பெற்று இருந்ததாகவே வைத்துக்கொள்வோம்.

சஸ்திர வைத்தியம், பிரஸூதி வைத்தியம், சுகாதாரம் முதலியவை குறைகூறமுடியாதபடி இருந்ததாகவே வைத்துக்கொள்வோம். அப்படி வைத்துக்கொள்வதாலேயே தத்காலம் அவைகளில் காணும் பல குறைகள் நிவர்த்தியாகுமாவென்றே கேழ்க்கிறோம். பழைய சுதேச புஸ்தகங்களைப் படிக்கவேண்டுமென்று சொல்லுங்கள் நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். பழைய புஸ்தகங்களை ஆராய்ச்சிசெய்யவேண்டுமென்று சொல்லுங்கள் அதையும் ஒப்புக்கொள்ளுகிறோம். இதற்காக ஒரு மூலதனம் வேண்டுமென்று சொல்லுங்கள். அதற்கும் நாங்கள் தயார். யாரும் இதை ஆக்ஷேபிக்கமாட்டார்கள். பழைய நூல்களைப்பற்றி இவர்கள் நிச்சயமாகச்சொல்லும் பெருமையில் எங்களுக்கு சந்தேகம் சந்தேகமே. ஆனால் நம் யூனிவர்சிடிகள் கலைக்கு உதவாத படிப்புகளில் ஏராளமான தொகையை விரயம்செய்துவருகின்றன. சுதேச நூல்கள்போன்ற குதூஹலமான ஒருபாடத்திலும் அவைகள் சிலவு செய்தால் அதை நியாயமாகயாரும் ஆக்ஷேபிக்கமுடியாது. கல்கத்தா யூனிவர்சிட்டிபோன்ற ஸ்தாபனங்கள் இதுவரை இவ்விஷயத்தில் கவனம் செலுத்தாதது ஆச்சரியமாகவேயிருக்கின்றது. நாம் அறிந்தமட்டில் தத்காலத்தில் சுதேசமுறைகள் ஆங்கிலமுறைகளைப்போல தங்களுக்கும் சில பாத்தியதைகள் வேண்டுமென்று வாதம் புரிவதில் மாத்திரம் சாமர்த்தியம் காட்டுகின்றன. வாதம்போதுமா? யோக்கியதை வேண்டாமா? புராதன முறைகளையும் நவீன முறைகளையும் ஓரேகாலத்தில் அடுத்தடுத்து கற்பிக்கப்புகும் பலபட்டரை பாடசாலைகள் ஏற்படுமாகில் வான சாஸ்திரத்திலும் ரசாயன சாஸ்திரத்திலும் பயிற்சிகொடுப்பதற்காக இவ்விரண்டு சாஸ்திரங்களிலும் ஒவ்வொரு பாகத்தை மாத்திரம் கற்பிக்கப்புகும் பாடசாலைகளை ஏற்படுத்துவதும் நியாயமாகலாம். ஆனால் படித்தவர்கள் இவ்விருவிஷயங்களையும் கேட்டு முதலில் திகைத்துப்போவார்கள். கொஞ்சமும் பொருத்தமில்லாத இந்த காக்ஷியை கண்டு பிறகு நகைப்பார்கள். முதிர்ந்த நாகரீகம் பெற்ற ஜனங்கள் அடைந்துள்ள பிரஜாயத்தத்தை கைகொள்ள இந்தியா தன் பாத்தியதைகளை நியாயமாக வற்புறுத்துகின்றது. வழக்கத்திலில்லாமல் தேஞ்சுமாஞ்சு போன ஓர் பழம் முறையை கைப்பற்ற தீர்மானமாக பின்னுக்கு அந்தாடிக்குமாகில் அந்த பாத்தியதை வளர்ச்சிபெற்றதாக ஆகாது. கலாசாலைகளில் பயிற்சி பெற்ற சுதேசவைத்தியர்களை கவர்மெண்டார் ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டுமென்றும் அதுமாத்திரமா? ஆங்கிலவைத்தியர்களுடன் சமானமாக பாவிக்கவேண்டுமென்றும் கூட வற்புறுத்தப்படுகின்றது. இந்தபாத்தியதைகளை அரசாங்கத்



தார் அங்கீகரித்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஆங்கிலவைத்தியர்களையும் சுதேசவைத்தியர்களையும் சரிசமானமாக கவர்மெண்டார் நடத்தவேண்டாமா? அப்பொழுது ஒவ்வொருதலைமைஸ்தலங்களிலும் ஒரு ஆயுர்வேத உயர்தர வைத்தியன் ஒரு யூனானிஉயர்தரவைத்தியன், ஒரு ஹோமோபதி உயர்தரவைத்தியன் ஏற்படுத்தவேண்டிவாராதா? ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒரு ஆஸ்பத்திரி ஒரு டிஸ்பென்சரி இவைகளை ஏற்படுத்தவேண்டாமா? ஐயோ பாவம்! ஒருஸ்தாபனமே செய்யக்கூடிய காரியத்திற்கு நாலுமடங்கு சிலவில் தனிதனி நாலுஸ்தாபனங்களை ஏற்படுத்துவது ஏழை இந்தியாவை வருத்துவதாகாதா! நிலைமையும் நகைப்புக்கிடமாகும், எந்த முறைக்கு ஆதரவு அளிப்பது எந்தமுறைகளுக்கு ஆதரவு மறுப்பது என்பதை அரசாங்கத்தார் தீர்த்துக்கட்டி விடுவதேமேல். தற்காலமிருக்கும் ஆங்கிலவைத்திய உத்தியோகஸ்தர்களைத் தள்ளிவிடவேண்டுமென்று தீவிரமான அபிலாஷை (ஜனங்களுக்கு) இருப்பதாக நம்காதில் விழவில்லை. சுதேசமுறைகளை அரசாங்கத்தார் ஆதரிக்கவேண்டுமென்பது யுக்திவாதத்தில் கொண்டுபோகப்படுமாகில் அப்பொழுது அடுத்தபடியென்ன? உத்தியோகங்களை சரிசமானமாக பகிர்ந்து கொடுக்கக்கூடாது. எங்களுக்கே அதிக உத்தியோகங்களைக் கொடுக்கவேண்டும் ஆங்கிலவைத்தியர்களை குறைக்கவேண்டுமென்று கூச்சல்போட துவக்கிவிடுவார்கள். சுதேசவைத்தியத்தை பரிசீலனைசெய்ய சென்னை அரசாங்கத்தார் நியமித்த கமிட்டி இந்த அபிப்பிராயத்தை வற்புறுத்தியிருக்கின்றது. அதாவது—" உலகத்தில் வைத்தியசாஸ்திரமென்பது ஒன்றே ஒன்றுதான் இருக்கக்கூடும். தத்காலத்தில் அநுஷ்டானத்திலிருக்கும் வைத்தியமுறைகள் எல்லாம் அதனுடைய ஓர்பாகமே ............வருங்காலத்தில் இந்தியாவில் எந்த வைத்தியர்களாயிருந்தாலும்சரி. சிகித்ஸாகாலங்களில் தங்கள் தங்கள் முறைகளிலுள்ள விசேஷஞானத்தை உபயோகிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் கூடியமட்டில் மற்றமுறைகளிலுமுள்ள விசேஷஞானத்தையும் கலந்து உபயோகிக்கும் விதமாக வைத்தியப்பயிற்சி பெறுவதைப்பார்க்க நாங்கள் விரும்புகிறோம்." இவ்வபிப்பிராயம் சாஸ்திரீயவைத்தியத்தின் லக்ஷியத்தையே வற்புறுத்துகின்றது. சாஸ்திரீயவைத்தியம் எந்தத்துறையிலிருந்தும்சரி பரிபூரணஞானம் சம்பாதிக்க பிரயத்தனப்படுகின்றது. சாஸ்திரீயவைத்தியம் தன் லக்ஷியத்தை (பரிபூர்ணஞானத்தை) யடையவெகுநாள் யாத்திரை செய்யவேண்டுமென்று ஒப்புக்கொள்ளுகின்றது. ஆனால் சுதேசவைத்தியமோ பலவருஷங்களுக்குமுன்னரே அந்த லக்ஷியத்தையடைந்துவிட்டதாக பெருமைப்படுகின்றது. தன்...

20153
சென்னை-600

னாகமதித்திருக்கும் ஒருவனுக்கு எவ்விதம் படிப்புசொல்லிக்கொடுக்க முடியும்! ஆங்கில வைத்திய சிறுவர்கள்போல சுதேசவைத்தியர்களும் ஒன்றுமறியாத சிறுவனாக தங்களை நினைத்தாலல்லது இவர்கள் கமிட்டியார்சொல்லிய உத்தமமான வழியைப்பின்பற்றுவார்களென்று நம்பமுடியாது. சுதேசவைத்தியர்களும் இவ்வபிப்பிராயத்தைத் தழுவுவார்களேயாகில் ஆங்கிலவைத்தியர்களைப்போலவே அந்தலக்ஷியத்தையடைய அதேவழியில் கைகோர்த்துச்செல்லத் தயாராக அந்திக்கைநோக்கி தங்கள் முகத்தைத்திருப்பிக்கொள்ளவேண்டும். அதேவழியில் தாங்களும் சேர்ந்து பிரயாணம் செய்வதாக சீக்கிரம் தெரிந்துகொள்ளவேண்டும். இருக்கும் நிலைமையைப்பார்த்தால் இந்தயோசனையை சுதேசவைத்தியர்கள் பின்பற்றுவார்களென்று தோன்றவில்லை. தங்களுடைய மேன்மையிலும் பூர்ண அறிவிலும் வெகுநாளாகக்கொண்டுள்ள மூடநம்பிக்கையை விடவேண்டும். தங்களுக்கு பூர்ணயோக்கியதை இருப்பதாக நினைப்பதையும் விடவேண்டும். முன்சொல்லிய லக்ஷியத்தையடைய சிரமமாயும் தீர்க்கமுமானவழியில் எங்களுடன் ஓடிவர கச்சை இழுத்து கட்டிக்கொள்ள வேண்டும். சுதேசமுறைகளைப்பயிலும் நமது சகோதரவைத்தியர்களுக்கு நாங்கள் உதவியளிக்க மறுக்கிறோமென்பது வெறும்பொய். ஆனால் பூர்ணஞானம் தங்களுக்கு இல்லையென்று நினைப்பவர் பூர்ணஞானம் படைத்து விட்டதாக நினைப்பவர்களுக்கு எவ்விதம் சொல்லிக்கொடுப்பது? நாங்கள் எங்கள் முறையையும், சுதேசவைத்தியர்கள் அவர்கள் முறையையும் பின்பற்றுவோமாகில் சுதேசவைத்தியர்களுக்கும் நமக்கும் ஏற்கனவே இருந்து வரும் சிநேகசம்பந்தத்தை நாம் காப்பாற்றிவரமுடியுமென்று உறுதி கூறுவோம். சுதேசமுறைகளை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்பது வெகு ஜனசம்மதமானால் சுதேசமுறைகளை கையாளுபவர்களே அவ்விஷயமாக ஆரம்பபிரயத்தனத்தைச் செய்யவேண்டும். ஆங்கிலவைத்தியத்தால் சாதிக்கமுடியாத காரியங்களை தாங்கள் சாதிக்கமுடியுமென்று அவர்கள் ருசுப்பிக்கவேண்டும். ஆங்கிலவைத்திய பத்ததிகளுடன் ஒப்பிட்டு சுதேசவைத்தியமுறைகளின் மேன்மையை நிரூபித்துக்காட்டினால் நாங்கள் தீர்மானமாக எங்களுக்குக்காட்டிக்கொடுக்கும் உயர்ந்த முறைகளை கைப்பற்றி விட்டால் என்னசெய்வதென்றே அவர்கள் திகைக்கின்றனர். ஜீவகாருண்யத்தை முன்னிட்டு அவ்விதம் செய்ய வேண்டியதே. அதுவே அழகு. எங்களுக்குத் தெரிந்தவிஷயங்களை ஒவ்வொரு அணுவும் வியக்தமாகும்படி உலகத்திற்கு தெரியப்படுத்துகிறோம். லோகோபகாரார்த்தமாக சுதேசமுறைகளின் அபூர்வ விஷயங்களை பகிரங்கப்படுத்தவேண்டியது நியாயமல்லவா? சுதேச



ந்த வருத்தத்துடன் தனி ரக்தம் சீதம் மாத்திரம் வெளிபோகும். பகலில் மலம்போகவேண்டுமென்று அவசியம் அடிக்கடிதோன்றும். சிலருக்கு ஒருநாளில் பலதடவை ரக்தசீதம்போகும். ஒருநாளைக்கு இருபது தடவை மலம் போகலாம். மூத்திரம்வரும்படி அடிக்கடிதோன்றும். இவ்வியாதியுடன் சேர்ந்துவரும் காய்ச்சலுக்கு தனியாக சிகித்சை செய்யும்படி அவசியம்கூட நேரலாம் அடிவயிற்றில் வேஷ்டிமுதலியவைகள் படுவதுகூட பளுவாகத்தோன்றும். வலிமுதலியவைகள் குறைந்திருந்தும் மலம் சேராமல் ரக்தம் சீதம் மாத்திரம் வெளிவந்தால் அப்பொழுது மலத்துவாரத்தை யொட்டியபாகம் மாத்திரம் கெட்டிருப்பதாக நினைக்கவேண்டும். மிகுந்த உஷ்ணதேசம், திடீரென சீதோஷ்ணம் மாறுவது, வஸ்திரங்களை மாற்றிதரிப்பது, விசேஷித்து இடுப்பில் கட்டிய வஸ்திரத்தை மேலுக்குப்போட்டுக்கொள்வது, செடிசெத்தைகளால் அசுத்தமாயும் அப்பிரகம் முதலியதாதுக்கள் நிறைந்த இடத்தில் இருப்பதுமாகிய ஜலத்தை அருந்துதல், அதிசாரத்தில் சொல்லியது போன்ற ஆகாரவித்தியாசம், ஈரக்கசிவுள்ள இடங்களில் படுப்பது, காற்றுவசதியற்றும் சாக்கடைத்தண்ணீர் தேங்கிநிற்கும் இடங்களில் வசித்தல், சரீரத்திற்கு அவசியம் வேண்டிய காய்கறிகள் சேராமல் ரக்தம் கெடுதல், ஆகிய இவைகள் இவ்வியாதிக்கு காரணங்களாகின்றன. அனேகமாக ஒவ்வொரு வியாதிக்கும் காரணம் ஒரே மாதிரியாகத்தான் சொல்லப்படுகின்றது. உலகினில் தோன்றும் வியாதிகளெல்லாம் கெட்டகாற்று கெட்டஆகாரம் கெட்டஇடம் கெட்டஜலம் என்ற இந்தகாரணங்களாலேயே உண்டாகின்றன. இவ்விதம் காரணம் ஒரேமாதிரியாக விருந்தாலும் அந்த காரணத்தால் உண்டாகும் வியாதிகள் மாத்திரம் பலவிதங்களாக இருக்கின்றன. இவ்வேறுபாட்டிற்கு காரணம் சுதேசநூல்களில் அடியில் வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது. எந்தகாரணத்தால் வியாதி வந்தபோதிலும் சரீரத்தில் திரிதோஷ நிலைமையை பாதித்தே வியாதி உண்டாகின்றது. திரிதோஷநிலைமை முதலில் பாதிக்கப்பட்டு பிறகு நிலைகெட்ட திரிதோஷங்களால் ரக்தம் முதலியதாதுக்கள் கெடுக்கப்படுகின்றன. திரிதோஷங்களுக்கு பற்பல குணங்களிருப்பதால் பாதிக்கப்படும் குணங்களுக்குத்தக்க விதமாகவும் அவைகளால் சீர்கெடும் ரக்தம் முதலிய தாதுக்களுக்கு ஏற்றவிதமாகவும் வியாதிகள் பலவிதங்களாகின்றன. (இதன் விபரம் திரிதோஷம் என்ற தலைப்பில் சந்திரிகையில் வெளிவரும்) ஆங்கிலவைத்தியர்கள் ஒவ்வொருவியாதிக்கும் குறிப்பிட்ட புழுக்கள் அல்லது பூச்சிகள் காரணமானதால் அதற்கு தக்கவிதமாக வியாதி பலவிதமாவதாக நினைக்கின்றனர். இவ்வியாதிக்கும் ஓர்

வித புழுகாரணமென்று சொல்லுகின்றனர். அப்புழு இருவிதமாகின்றது. இயற்கையில் குடல்களிலுள்ள புழுக்களில் ஓர்புழுவின் உக்கிரத்தால் உண்டாவது ஒருவிதம். வெளிப்புழுக்கள் சரீரத்தில் நுழைவதால் உண்டாவது மற்றொருவிதம். இந்த இருவிதத்தையும் Amoebic Dysentery என்றும் Bacillary Dysentery என்றும் ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். Amoebic Dysentery (அமோபிக் டிசென்டரி) யில் குடல்கள் புண்ணாகிவிடுவதும் மற்றதில் அவ்விதம் ஆகாததும் அடையாளம். நமது தேசத்தில் அமோபிக் டிசென்டரியே அதிகம் நேருவதாகவும் சொல்லுகின்றனர். இவ்வியாதி ஒட்டுவாரையொட்டியாக பரவுகின்றது. சிலசமயங்களில் அவ்விதமில்லாமல் தனிநபர்களுக்கும் நேருகின்றது. எல்லாஜாதிகளிலும் எல்லாவயதிலும் வருகின்றது. இவ்வியாதி ஒட்டுவாரையொட்டியாக பரவுவதற்கு ஜலமே முக்கிய காரணமாகச்சொல்லலாம். சில பூச்சிகளாலும் இவ்வியாதி பரவுகின்றது. வியாதிப்புழுக்களால் அசுத்தப்பட்டநீரை சேர்ப்பதால் சிலசமயங்களில் பாலும் இவ்வியாதியை பரவும்படி செய்கின்றது. மேற்படி அசுத்தஜலத்தில் நனைத்தபாத்திரங்களில் பாலைவைத்து உபயோகிப்பதும்ஓர்காரணமே. காய்கறிகளும் இவ்வியாதியைபரப்புவதில் ஓரளவு காரணமாகின்றது. மணலில் வடிகட்டிவிட்டால் ஜலத்தில் உள்ள பலபுழுக்கள் விலக்கப்படலாமாகிலும் இவ்வியாதியின் புழுக்களை விலக்க மணலுக்கும் சக்திகிடையாது. பெருங்குடலில் (colon) இயற்கைக்கு அதிகமாக திரவாம்சம் உண்டாகின்றது. அதனால் கபம் அதிகமாகின்றது. அவ்விடத்தில் ஆகாராதிகளால்பிரகோபத்தையடைந்தவாயுதிரவத்தையும் கபத்தையும் குடலைவிட்டு வெளிப்படுத்துகின்றது. வாயுபிரகோபத்தை யடைந்திருப்பதால் முழுவதும் ஒரேதடவையில்வெளியேற்றப்படுவதில்லை. கொஞ்சம்கொஞ்சமாகவேவெளியேறுகின்றது. அதனாலேயே முக்கிமுக்கி மலம்அல்லது ஏதாவதுஒருபாகம் வெளியேறுவதும் அல்லது ஒன்றுமே வெளிவராததுமாகிய tormina, tenesmus என்ற இரு தொந்திரவும் உண்டாகின்றது. "வாயு: ப்ரவிருத்தோஸிதம் பலாஸம் நுததி" என்று முன்சொல்லிய விஷயத்தைச்சொல்லும்பொழுது இதற்கு காரணங்கள் வாயுவும் அதிகமாககுடலில் சேர்ந்த கபஜலமும்தான் என்று சுதேசநூல்கள் கூறுகின்றன. கர்ப்பிணிஸ்திரீகளுக்கு இவ்வியாதி காணுவதும் அதனால் கர்பத்திற்கு தீங்குநேருவதும் இந்தியாவில் அதிகமாகவிருக்கிறது. ரக்தக்கடுப்பு வியாதியால் liver என்ற யகிர்த் அல்லது ஈரலில் கட்டியுண்டாகும். வலது சுவாஸப்பையும் கெடலாம்.



சிகித்சை—இவ்வியாதியில் பத்தியத்தை நன்குகவனிக்கவேண்டியது அவசியம். குடல் புண்ணாவதால் கெட்டியான ஆகாரங்களை கொடுக்கக்கூடாது. சிலசாதாரணநிலைமைகளில் தயிர்சாதம் போடுவதும் மாங்கொட்டை குழம்புடன் அன்னம் போடுவதும்போன்ற முறைகள் சௌக்கியமுண்டுபண்ணுவது உண்மையே. சில பலமான நிலைமைகளில் இவ்விதம் அபத்தியம்செய்வது பிராணஹாநியையே விளைவித்திருக்கின்றது. புளி, காரம், உப்பு, ஆகிய இவைகளை பரிகரிக்க வேண்டும். பால்கஞ்சிகொடுப்பது கொஞ்சமும் தீங்கைவிளைவிப்பதில்லை. ஆகையால் முன்ஜாக்கிரதையை பிரதானமாக நினைத்து மற்ற ஆகாரங்களை நிறுத்தி பால்கஞ்சியே கொடுத்துவருவது மிகவும் நல்லது. தாகத்திற்கு மிதமானநீர் உபயோகிக்கவேண்டும். கஞ்சி, நீர், இவைகள் அதிகஉஷ்ணமாகவாவது அல்லது மிககுளிர்ந்தாவது இருக்கக்கூடாது. வயிற்றுவலி அதிகமாகில் கால்படி ஆமணக்கு விதையை உரலில் இடித்து ஒருமூடி முத்தினதேங்காயைத் திருவிப்போட்டு இரும்பு சட்டியில் வதக்கி அடிவயிற்றுக்கு ஒத்தடம் கொடுக்கலாம். காய்ச்சல் அதிகமாக வீசுங்காலத்திலும்கூட அவசியமாகில் இந்த ஒத்தடம் கொடுக்கலாம். வெள்ளாட்டுப்பாலை வேண்டியவளவு உபயோகிக்கலாம் இவ்வியாதியில் காய்ச்சலுக்காக தனி சிகித்சை வேண்டுவதில்லை. கடுப்பு நிற்கும்பொழுது காய்ச்சலும் தானாகவே நின்றுவிடும். வியாதியின் ஆரம்பத்தில் கட்டுமருந்துகளை உபயோகித்தால் குணத்தைக்காட்டும் ஆனால் சிலநாட்களில் மறுபடியும் மிகுந்த வேகத்துடன் திரும்பி வந்துவிடும். ஆகையால் இரண்டொருதடவை மலம் போகும்படி செய்து பிறகே கட்டுமருந்துகளை உபயோகிக்கவேண்டும். மலம் போகும்படி செய்ய வேறு மருந்துகளைக்காட்டிலும் அரைக்கால் அவுன்சு விளக்கெண்ணையை ஒருபாத்திரத்தில்விட்டு அதற்குசரியாக பச்சையானபசும்பாலைவிட்டு விரலால்மர்தித்தால் இரண்டும் கலந்துவிடும். அதை அப்படியே உட்கொள்ளவும். நான்குமணி கழித்து அதேமாதிரி ஒருதடவை சாப்பிடவும். இரண்டு அல்லது மூன்று தடவை மலம் போகும். காய்ச்சலில் விளக்கெண்ணை கொடுக்கக்கூடாதாயினும் இவ்விதம் செய்வதால் இவ்வியாதியில் யாதொரு தீங்கும் உண்டாகாமலிருப்பதுடன் குடலில் புண்களுக்கும் ஓரளவு ஹிதத்தை கொடுக்கின்றது. அதிசாரங்களில் சொல்லியமருந்துகளையும் உபயோகிக்கலாம்.

**ரக்தக்கடுப்புக்கு கசகசா**—இவ்வியாதியில் கசகசா மெத்த உபயோகமாகின்றது. குடல்களில் புண்களையாற்றி மலத்தில் ரக்தம்போகவொட்டாமல் செய்வதில் நிகரற்ற சக்திவாய்ந்தது. மூன்று தோலா

கசகசாவை மண்ணில்லாமல் புடைத்து சுத்தஜலத்தைவிட்டு அம்மியில் அரைக்கவும். நன்றாக அரைத்தவுடன் ஒருவெள்ளிபாத்திரத்தில் பிழியவும். பிறகு சக்கையை முன்போல ஜலம்விட்டரைத்து பிழியவேண்டும். இவ்விதம் கசகசாவை மூன்று தடவை பிழிந்தால் அதன் சாரம் முழுவதும் வந்துவிடும். அந்தரசத்தை வடிகட்டவேண்டிய அவசியமில்லை. கசகசா சக்கைகள் கொஞ்சம் சேர்ந்து இருப்பதால் பாதகமில்லை. பிறகுசற்று உருசிகொடுக்க பனங்கல்கண்டு அல்லது ஜீனிகல்கண்டு வேண்டியவளவு சேர்த்து ஒருவேளையில் முழுவதையும் சாப்பிடலாம். தினம் இரண்டுவேளை அல்லது மூன்றுவேளை வியாதியின் கடுமைக்குத் தகுந்தவிதமாக உபயோகிக்கவும்.

குறிப்பு—ரக்தக்கடுப்பு முற்றி கடுமையாக இருக்கும் பொழுதுசிலகுறிகள் காணும். அதாவது மலதுவாரம் வெத்தும் மலதுவாரம் கட்டுப்படாமல் "புரிச் புரிச்" என்ற சப்தத்துடன் ரக்தமும் மலமும் வெளியேறுவதும், பிணநாற்றம் நாறுவதும் கண்களை மருள மருள விழிப்பதும் ஆகிய இவைகள் மரணக்குறிகள். இந்த அவஸ்தையில்கூட கசகசா பிரயோகம் ரக்தத்தை நிறுத்திவிட்டதுடன் மலமும்கெட்டியாகும்படி செய்கின்றது. இவ்விடத்தில் ஓர் அனுபவத்தை எழுதுவது அவசியமாகின்றது. சுமார் எட்டுவயதுள்ள ஓர்சிறுவனுக்கு ரக்தக்கடுப்புகண்டு சுமார் இருபது நாளாக ஆங்கிலவைத்தியம் செய்துவைக்கப்பட்டது. jpecacnanha, Dover's powder, என்ற மருந்துகள் சிலநாள் உபயோகிக்கப்பட்டது. அதில் குணம் காணாததுபற்றி நவீந சிகிச்சை நடத்தப்பட்டது. அதாவது பேதிசிகிச்சை. எப்சம்சால்ட் என்ற பேதி உப்பைக்கொடுத்து தினம் பேதியாகும்படி செய்யப்பட்டது. அதிலும் குணம் காணாமல்போனவுடன் நோயாளி கைவிடப்பட்டான். டாக்டர் அசாத்தியம் என்று தெரியப்படுத்தியவுடன் சுதேசவைத்தியனிடம் ஒப்புவிக்கப்பட்டது. அக்காலத்தில் நோயாளி மிகவும் மெலிந்தும் நடக்கசக்தியற்றும் பால்கூடசாப்பிடாமலும் பிரதிதினம் முப்பது தடவை ரக்தம் சீதம் போய்க்கொண்டிருந்தது. முன்சொல்லியபடி கசகசாவை ஆறுதோலா எடுத்து ஆறுஅவுன்சு ரசம் தயார் செய்துவைத்துக்கொண்டு இரண்டு மணிக்கு ஒருதடவை ஒருஅவுன்சுவீதம் சற்று உஷ்ணப்படுத்தி கொடுத்துவந்ததில் மூன்றுவேளை மருந்து கொடுத்தபிறகு ரக்தம் போவது சுத்தமாக நின்றுவிட்டது. வயிற்றுவலி கடுப்புமுதலியவைகளும் கூடியமட்டில் தணிந்துவிட்டது. தவிர சீக்கிரமாககுணம் வேண்டுமென்று நினைத்தால் மேற்படி ரசத்தில் குன்றுமணிவளவு அபினி விட்டுக்கொடுத்து. கொடுத்துவிட்டால் [illegible] நன்மையைச் செய்கி-



ன்றது. ஆனால் அபினியை தினம் ஒன்றுக்கு இரண்டு குன்றுமணிதான் உபயோகிக்கலாம். வேளைஒன்றுக்கு ஒரு குன்றுமணியிடைதான் கொடுக்கலாம். வயதிற்குதக்க விதமாக அபினியை கொஞ்சம் கூட்டியும் குறைத்தும் உபயோகிக்கவேண்டும். நம் தேசத்தில் விசேஷித்து பிராமணஸ்திரீகள் பிரசவகாலத்தில் திப்பிலியை அதிகமாக சேர்ப்பது உண்டு. அக்காலத்தில் திப்பிலி அதிகமாகசேர்ந்தால் பிறகு சரீரத்தில் வியாதியேவராதென்பது ஓர்பிரமை ஏராளமாக திப்பிலியைப்பொடிசெய்து தேனைவிட்டுபிசைந்துகொண்டு நெல்லிக்காயளவு கூட ஒருவேளைக்கு சாப்பிட்டுவருவார்கள். இவ்விதம் சாப்பிடுவதால் பலருக்கு ரக்தக்கடுப்பு நேருகின்றது. லேசானகாய்ச்சலும் கணுக்களில் வலியும் தினம் ஐந்து அல்லது ஆறுதடவை மலத்துடன் ரக்தம் கலந்தும் போகும். Tormina, tenesmus, என்ற முன்சொல்லிய தொந்திரவுகளும் சேருகின்றன. இவ்வியாதிகளில் திப்பிலியை உடனே நிறுத்திவிட்டு பாலையே பத்தியமாகவைத்து இம்மருந்தை உபயோகித்தால் உடனே குணமாகின்றது. சுதேசமுறைகளில் திப்பிலி பலவிடங்களில் ஒளஷதமுறையில் சேர்ந்தாலும் அதன் துர்குணத்தை விலக்க பிரதிமருந்தும் சேர்த்து சொல்லப்பட்டிருக்கின்றது. பிரதிமருந்து மூங்கில் உப்பு. இது கடைகளில் கிடைக்கும். சுதேசநூல்களில் திப்பிலி சேரும் முறைகளிலெல்லாம் அனேகமாக மூங்கிலுப்பு சேர்ந்தே இருக்கும். "நதாமத்யுபயுஞ்ஜீத ரசாயனவிதிம்விநா" திப்பிலியை சாமான்யமாக அதிக அளவிலும் அதிககாலமும் உபயோகிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ரக்தக்கடுப்புக்கு சோகிபஸ்பம்—அதிக பெருமன் இல்லாதது அதாவது சுமார் ஒருரூபாயிடை கனமுள்ளதான சோகி அல்லது பலகரைகளைப்பொறுக்கிஎடுத்து ஜலத்தில் கழுவி சுத்தம்செய்துபிறகு ஒரு பீங்கானில் போட்டு பலகரை முழுக எலுமிச்சம்பழரசம் விட்டு வெய்யிலில்வைக்கவும். ரசம் வற்ற வற்ற புதிய ரசம் விடவேண்டும். இவ்விதம் செய்வதால் பலகரைகரையும். கரைந்தபாகத்தை தனியாக எடுத்துவைத்துக்கொண்டு கரையாதபாகத்தை மறுபடியும் முன்போல செய்யவும். இவ்விதம் சிலநாட்கள் செய்தால் பலகரை முழுவதும் கரைந்துவிடும். பிறகு அதை ஒரு அகலில்போட்டு மூடி சீலைமண்செய்து ஐம்பது எருவில்புடம் போடவும். ஆறியபிறகு எடுத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும். ஒருபணவிடை அல்லது இரண்டு கிரெயின்சுவீதம் தினம் மூன்றுதடவை பசும் வெண்ணெயில் உட்கொள்ளவும். வேளைஒன்றுக்கு நெல்லிக்காயளவு வெண்ணெ உபயோகிக்கலாம். சிறுகுழந்தைகளுக்கு குறைந்த அளவில் பஸ்மத்தையும் வெண்ணெயையும் உபயோகிக்கலாம்.

குறிப்பு—முன்சொன்ன முறைப்படி பலகரைபஸ்மம் செய்வது சிலநாள் பிடிக்குமாதலால் அவசரமாக வேண்டியிருந்தால் பலகரைகளை ஒரு அகலில் அப்படியேபோட்டுமூடி சீலைமண்செய்து முன்சொல்லியபடி புடம்போட்டு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் முன்சொன்ன அளவில் பாதி யளவுதான் உபயோகிக்கவேண்டும். அதிக அளவில் உபயோகித்தால் அரோசகம் ஓர் வித ஏப்பம், ஓக்காளம் ஆகிய இவையுண்டாகும். ஆகையால் அவசரத்திற்கு இம்முறை உபயோகப்பட்டாலும் முன்சொல்லியவிதமே தயாரித்துக்கொள்வது உத்தமம். இந்தபஸ்மத்தை வெண்ணெயில் சாப்பிடமுடியாவிட்டால் தேனிலும் சாப்பிடலாம். முன்சொல்லிய கசகசா ரசத்தையாவது அல்லது அடியில்சொல்லப்படும் ரசத்தையாவது அநுபானமாக சாப்பிடலாம்.

ரக்தக்கடுப்புக்கு மற்றொருமுறை—தென்னம்பாளை மலராத பூவைக்கொண்டுவந்து இடித்து ரசம் பிழிந்து அந்தரசத்தில் ஒரு அவுன்சில் ஒருகுன்றுமணியிடை அபினியைக்கலந்து கொடுக்கலாம். தினம் மூன்றுதடவை கொடுக்கலாம்.

குறிப்பு—தென்னம்பாளையில் உள்ளிருக்கும் மலராத பூங்கொத்தின் ரசத்திற்கு குடல்புண்களை ஆற்றும்சக்தி மிதமாகவும் கிராஹி குணம் அதாவது மலத்தைக்கட்டும் குணமும் இருப்பதாலும் அபினிக்கு குடல்களின் பரபரப்பைதணிக்கும் சக்தி விசேஷமாயும் வேதனையைத்தணிக்கும் குணமுமிருப்பதால் ரக்தப் போக்கு வயிற்றுவலி கடுப்புமுதலிய உபத்திரவங்களைத்தணிக்கும் ஆனால், குடல்புண்களையாற்றி ரக்தப்போக்கை உடனே நிறுத்தி நாக்குக்கும் இன்பமாக விருக்கும் விஷயத்தில் கசகசாவை மிஞ்ச வேறுமருந்துகிடையாது.

ரக்தக்கடுப்புக்கு மற்றொருமுறை—பெருமரத்தின் பட்டையை புதிதாகக் கொண்டுவந்து உரலில் இடித்து பிழிந்த ரசத்தை ஒருஅவுன்சுவீதம் தினம் மூன்றுதடவை கொடுக்கவும்.

குறிப்பு—பெருமரம், பீமரம் என்று நம்ராஜதானியில் வழங்கும் ஓர்மரத்தை எல்லாவிடங்களிலும் காணலாம். மரத்தின்பட்டையைக்கீறி படிந்திருக்கும்பால் மட்டிப்பால் என்ற பெயருடன் கடைகளில் விற்பனையாகின்றது. குடல்புண்ணை ஆற்றும் குணம் இதற்கும் விசேஷித்து உண்டு. இதிலும் முன்சொல்லியபடி அபினியைச்சேர்த்தும் கொடுக்கலாம். அபினி, கசகசா, பெருமரம், சோகி, தென்னம்பாளை ஆகிய இந்த சாமான்களைக்கொண்டு ரக்தக்கடுப்பை நிறுத்தத்தெரியாதவன் வைத்தியனென்ற பெயர்வகிப்பது அவமானமே.

210153

# " வைத்திய சந்திரிகா. "

ஆயுர்வேத சாஸ்திரத்தின் உண்மைப் பெருமையையும் அதன் ஆராய்ச்சியினால் மனிதசமூகத்திற்கு ஏற்படக்கூடிய பிரயோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே நமது மாஸிகை வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ண பாண்டித்யம் வாய்ந்த எமது ஆசிரியரும், மற்றும்பழைய முறையில் பயிற்சியுடையவர்களும் எழுதிவரும்விஷயங்கள் பண்டிதருக்கும், பாமரருக்கும் நல் விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்களின் மொழிபெயர்ப்பு நல்ல நடையில் வெளிவரும். வியாதிகளின் காரணம், குணம், சிகிச்சை முதலியவைகளை மூடுமொந்திரமில்லாமல் " வைத்திய சந்திரிகா " பிரதி மாதமும் தாங்கிவருவாள். வைத்தியமுறைகளில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்க்கு ஒருவைத்திய கலாசாலையைப்போல் நமது " சந்திரிகா " உதவுவாள்.

ஒருகாலத்தில் தனக்கு ஒப்பும், உயர்வும் இல்லாமலிருந்த நம் நாட்டு சிகிச்சா முறைகளின் பிரயோஜனத்தை எடுத்துக்காட்ட வெளிவரும் நமது பத்திரிகை தமிழ் மக்களின் முழு அனுதாபத்தையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறது

வியாபாரிகளே! ஏன் நல்ல சரக்கை வைத்துக்கொண்டு தூங்குகிறீர்கள். கடையில் சாமான்களை வைத்திருந்தால் வியாபாரம் விர்த்தியடையாது. உங்களிடம் உயர்ந்த சரக்கு இருப்பதை யார் அறிவார்கள்? தமிழ் நாடு முழுமையும் இன்னும் தமிழன் வசிக்கும் எல்லா இடங்களுக்கும் செல்லும் "வைத்தியசந்திரிகா " வில் ஓர் முறைவிளம்பரம் செய்து பாருங்கள். மேல் நாட்டாரின் வியாபாரமுன்னேற்றத்தின் இரகசியம், அவர்கள்செய்யும் "விளம்பர"மென்பது நம்மவரில் பலருக்கு இன்னும் தெரியாது.

வைத்தியர்களே! உங்கள் மருந்துகள் ஏராளமாய் விற்பனையாகவேண்டுமா? வைத்திய உலகத்தில் தனக்கு நிகரில்லாத் தமிழ் மாஸிகையான இந்த பத்திரிகை மூலை, முடுக்குகளிலிருக்கும் ஆயுர்வேத, யூனானி, சித்த வைத்தியசாலைகளையும், வைத்தியர்களின் கைகளையும் அலங்கரிக்கிறது ஆகையால் ஒருமுறையாவது எங்கள் சஞ்சிகையில் விளம்பரம் செய்து பாருங்கள்.

காரியஸ்தர்,
" வைத்திய சந்திரிகா " கரூர்.

| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா :— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ. 8. |
| உள்நாட்டிக்கு ரூ. 2. | " " ½-க்கு ரூ. 4. |
| வெளிநாட்டிக்கு ரூ. 3. | " " ¼-க்கு ரூ. 2. |